www.tamilarangam.net

# சக்தி

இதழ் 4.4
ஒக்ரோபர் '98



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வாசகர்களிடமிருந்து ஆக்கங்களையும் விமர்சனங்களையும் எதிர்பார்ப்புக்கு உட்படுத்திக் காத்திருக்கிறது

சக்தி

தொடர்புகட்கு

SAKTHI
BOKS 99 OPPSAL
0619 OSLO 6
NORWAY

ஔவையாரும் பெண்களும்
*(பக்.02) - மாலினி(நோர்வே)*
விமர்சனம்
*(பக்.06) - நயாகரன்(பிரான்ஸ்)*
பாலரஞ்சனி சர்மா கவிதைகள்
*(பக்.12) - பாலரஞ்சனி சர்மா(இலங்கை)*
சர்வதேசப் பெண்ணியத்தை நோக்கி...
*(பக்.14) - தேவா(சுவிஸ்)*
வாயில் ருசியும் தலையில் அரைப்பும்
*(பக்.20) - றஞ்சி(சுவிஸ்)*
தமிழில் பெண்கள் சினிமா - சில குறிப்புகள்
*(பக்.22) - யமுனா ராஜேந்திரன் (லண்டன்)*
சீதனம் - சில புள்ளிகள்
*(பக்.25) - ரவி(சுவிஸ்)*
தமிழ்த்தாய்
*(பக்.28) - க.வே.பூங்கொடி(அமெரிக்கா)*
பெண்ணிலைவாதம் - சில கேள்விகள்
*(பக்.30)*
கலந்துரையாடல்
*(பக்.32) - றஞ்சி(சுவிஸ்)*
பெண்ணே உனக்குத் தலைவணங்குகிறேன்
*(பக்.36) - சுதர்சனா(கனடா)*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஔவையாரும் பெண்களும்

மாலினி (நோர்வே)

அண்மையில் கடையொன்றில் பல இந்திய சிற்றேடுகளுடன் ஔவையாரின் ஆத்திசூடி, கொன்றை வேந்தன், நல்வழி, வாக்குண்டாம் சிற்றேடுகளைப் பார்க்கக் கூடியதாக இருந்தது. பாலர் பாடப்புத்தகத்தில் ஔ எழுத்துக்காக நான் ஞாபகப்படுத்திக் கொண்ட இந்தப் பாட்டியை நான் நீண்டகாலமாக மறந்து இருந்தேன் என்றுதான் கூறவேண்டும். அழகிய வர்ண அட்டையுடன் தரமான அச்சு எழுத்துக்களுடன் சிற்றேடுகள் காட்சி தருகின்றன. ஔவையாரின் நல்லுரைகளில் பாரபட்சங்களை உங்களுடன் பகிர்ந்து கொள்ளலாம் என்ற நம்பிக்கையில் எழுந்ததுதான் இந்தக் கட்டுரை. ஆத்தி சூடியிலிருந்து வாக்குண்டாம்வரை உள்ளவற்றில் சிலவற்றை உதாரணத்திற்கு எடுத்துள்ளேன்.

**ஆத்திசூடி**

ஆசூ. 63
*தையல் சொற்கேளேல்.*
வஞ்சகமாகப் பேசும் பெண்ணின் சொற்கேட்டு நடவாதே.

ஆசூ.93
*மெல்லினல்லாள் தோள் சேர்*
மென்மையான நற்பண்புகள் அமைந்தவளை மனையாளகப் பெற்று இல்லறம் நடத்து.

ஆசூ. 96
*மைவிழியார் மனையகல்.*
காமமூட்டும் மைதீட்டிய விழிகளையுடைய பெண்களது வீட்டை நெருங்காதே.

**கொன்னைவேந்கன்**

கொ.வே 5
*உண்டி சுருங்குதல் பெண்டிர்க்கு அழகு.*
அளகுக்கு அதிகமாக உண்ணாது விடுதல் பெண்களின் உடலழகைப் பேணும் வழியாகும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கொ.வே 10

*ஒருவனைப் பற்றி ஓரகத்து*

பெண்ணானவள் கணவனாக ஒருவனை அடைந்து அவனது உள்ளத்தில் இடம் பெற வேண்டும். இறைவனை அடைந்து வீடு பேறு அடைவதையும் கூறலாம்.

கொ.வே.14

*கற்பு எனப்படுவது சொற்திறம்பாமை.*

கணவனின் சொல்லைத்தட்டாமல் நடப்பதே கற்பு ஆகும்.

கொ.வே. 15

*காவல்தானே பாவையர்கழகு.*

தனது கற்பைப்காப்பாற்றிக் கொள்வதே பெண்ணுக்குப் பெருமை தரும் செயலாகும்.

கொவே. 41

*துடியாப் பெண்டிர் மடியில் நெருப்பு*

கணவனுக்கு செய்யவேண்டியவற்றை செய்ய வேண்டும் என்ற ஆர்வம் இல்லாத மனைவி மடியிலே கட்டிக் கொண்ட நெருப்புக்குச்சமமாவாள்

கொ.வே. 42

*தூற்றும் பெண் கூற்றெனத்தகும்*

கணவனின் குறைபாடுகளைப் பிறரிடம் எமுத்துரைக்கும் மனைவி யமனுக்குச் சமமாவாள்

கொ.வே 56

*பேதமை என்பது மாதர்க்கு அணிகலன்*

அறிந்தும் அறியார் போல் அடங்கியிருக்கும் □ மடம்□ எனும் குணம் பெண்ணுக்கு சிறப்புத்தரும் அணிகலனாகும்.

கொ.வே 78

*மைவிழியார் தன் மனை அகன்று ஒகு*

கண்ணுக்கு மை தீட்டி காமவழல வீசுகின்ற தாசிகளது வீட்டை அடையாதே.

**வாக்குண்டாம்**

வாக்குண்டாம். 18

*ஆடி அமுக்கி முகக்கனும் ஆழ்கடல் நீர்*
*நாழிமுகவாது நானாழி - தோழி*

www.tamilarangam.net



*நதியும் கணவனும் நேர்படினும்*
*தத்தம் வதியின் பயனேபயன்.*
தோழியே ஆழமான கடலில் ஆழ அமுக்கி அள்ளினாலும் ஓர் நாழி நான்கு நாழி தண்ணீரைக் கொள்ளாது அதேபோல் பெண்களுக்கு செல்வமும் ஏற்ற கணவனும் வந்து வாய்த்தாலும் தத்தம் வதிப்பயனுக்கு தக்க சுகத்தையே அனுபவிப்பர்

வாக்குண்டாம்
*இல்லாள் அகத்திருக்க இல்லாத தொன்றில்லை*
*இல்லாளும் இல்லாளே ஆமாயின்- இல்லாள்*
*வலிகிடந்த மபற்றம் உரைக்குமேல் அவ்வில்லம்*
*புலிகிடந்த தூறாய்விடும்.*

குணவதியான மனையாள் வீட்டில் இருப்பாளாயின் அவ்வீட்டில் எல்லாம் நிறைவாக இருக்கும் மனையாள் இல்லாத வீடும் கடும் சொற்களைக் கூறும் மனையாள் உறையும் வீடும் புலி பதுங்கிக்கிடக்கும் பற்றைபோலாகிவிடும்.

வாக்குண்டாம் 26
*கல்லாத மாந்தர்க்கு கற்றுணர்ச்தார் கூற்றம்*
*அல்லாத மாந்தர்க்கு அறம் கூற்றம் - அமல்லிய*
*வாழைக்குத்தான் ஈன்ற காய் கூற்றமே*
*இல்லிற்கு இசைந்து ஒழுகாப் பெண்*
வலிமை குறைந்த வாழைக்குத்தான் ஈன்ற காயே அல்லது குழலயே யமனாகும் . மனிதருக்கு அறிவுபடைத்தோர் கூறும் நல்லுரைகள் யமனாகும். நல்லாராதார் இல்லாதாருக்கு தருமம் யமனாகும். கணவனது கருத்தறிந்து ஒழுகாப் பெண்ணும் யமனாகும்.

**நல்வழி**

*இழுக்குடைய பாட்டிற்கு இசை நன்று சாலும்*
*ஒழுக்கம் உயர்குலத்தின் நன்று - வழக்குடைய*
*வீரத்தின் நன்று விடா நோய் பழிக்கஞ்சாத்*
*தாரத்தின் நன்று தனி*

இலக்கணப் பிழையுடைய பாட்டிலும் பார்க்க இசையே நல்லது. உயர்குலத்தில் உதித்தாலும் பண்பட்ட ஒழுக்கமே நன்று விதிமுறைக்கு மாறாகப் போரிட்டு வெற்றியீட்டுவதிலும் பார்க்க தீராத நோயாளியாக இருப்பது நன்று. பிறர் கூறும் பழிக்கஞ்சாது தவறிழைக்கும் மனைவியோடு கூடிவாழ்வதிலும் தனி மனிதனாய் வாழட்கதே நன்று.

www.tamilarangam.net

ஆத்திசூடி ஒற்றை வரியில் ஆரம்பித்து வாக்குண்டாம் நல்வழியும் வெண்பா வடிவில் தொடர்கின்றன. ஔவையாரின் எழுத்துத்திறனை எளிதாக மதிப்பிட்டு விடமுடியாது. சங்ககாலத்தில் ஐம்பதிற்கு மேற்பட்ட பெண்புலவர்கள் வாழ்ந்ததாகக் கூறப்படுகிறது. சங்ககாலப் புலவர்களுள் அறிவுத்திறனும் புலமையுரமும் நிறைந்தவர் ஔவையார் என்றும் அதியமான் என்ற அரசன் தான் அரிதாய்ப் பெற்ற நெடுநாள் வாழவைக்கும் நெல்லிக்கனியை ஔவையாருக்கு கொடுத்ததாகவும் சொல்லப்படுகிறது. தொண்டைமானிடம் அதியமான் சார்பில் ஔவையார் தூது சென்று இரு அரசர்களுக்கும் இடையே போர்மூளாத வண்ணம் அருள் தொண்டு செய்ததாகவும் கூறப்படுகிறது.

மனது பற்றியும், துறவு, தானம், தருமம், கல்வி, சூழவிருக்கும் மக்களுடன் அன்பாக வாழ வேண்டும் என்று பல நல்ல விடயங்களைக்கூறும் ஔவையார் தன்னை இல்லற வாழ்க்கைக்குள் இணைத்துக் கொள்ளாதவர். தீவிர விநாயக பக்தரான இவர் தனது அழகிய இளமையான உடல் அமைப்பு வேண்டாம் என்று விநாயகரை வேண்டி நாம் படங்களில் காணும் வயதான தோற்றத்தைப் பெற்றதாக கூறப்படுகிறது. இவற்றையெல்லாம் ஒரு புறம் வைத்து விட்டு பெண்களை அவர் எவ்வாறு தன்னுடைய பாடல்களில் சித்தரித்துள்ளார் என்று நோக்கும் போதுதான பல கேள்விகளை எழுப்ப வேண்டியிருக்கிறது.

வஞ்சகமாகப் பேசும் பெண், மென்மையான நற்பண்புகள் அமைந்த பெண், காமமூட்டும் மைதீட்டிய பெண், கணவன் சொல்லைத்தட்டாத பெண், கற்பைக் காப்பாற்றிக் கொள்ளும் பெண், கணவனுக்குத் தொண்டு செய்யும் பெண், குறைகளை வெளியே சொல்லாத பெண், மடமையான பெண், குணவதியான பெண் , கருத்தறிந்து ஒழுகாப் பெண் விதிப்பயனுடைய பெண் இப்படி பல பெண்களை ஔவையார் கூறியுள்ளார். அந்த ஆச்சிய ஏன் இங்க இழுத்தெண்டாறியள் விடுங்கோ என்று எங்களில் பலர் முணுமுணுக்கலாம்.

காவியங்கள் இலக்கியங்கள் பெரும்பாலானவற்றில் பெண்கள் தெய்வங்களாக, பரத்தையர்களாக, காமுகிகளாகவும், ஆண்கள் சகல வல்லமையும். பொருந்தியவர்களாகவும் வருணிக்கப்பட்டிருப்பது வழமை என்றே கொள்ளலாம். பெண்களுக்கு ஒன்றில் இமயம் அல்லது பாதாளம் என்ற அந்தஸ்துதான் வழங்கப்படுகிறது.

ஔவையார் தான் வாழ்ந்த காலத்துப் பெண்களின் உண்மையான நிலைமையைப் புறக்கணித்தது ஏன்? பெரும்பாலான புலவர்களைப் போல அவரும் பெண்களுக்கு முத்திரை சேர்த்துள்ளார்.

சிலவேளை ஔவையார் எந்த வர்க்கத்தைச் சார்ந்தவர் என்று நோக்குங்கால் எங்களுக்கு ஏதாவது புரியுமோ?

www.tamilarangam.net



# எதிரியுடன் கூட்டுச்சேர்ந்து போராடல் எதிரி சார்பானதே ஒழிய மக்கள் சார்பானதல்ல.

சக்தி 4.3 கிடைக்கப்பெற்றேன். இவ்விதழில் வெளியாகியிருந்த சில கருத்துக்களை விமர்சனத்துக்குள்ளாக்குகிறேன்.

- றயாகரன்

பிரான்ஸ்

ரங்கூனுக்கு அப்பால் என்ற திரைப்படத்தின் யமுனா ராஜேந்திரனின் விமர்சனத்தை பெண்விடுதலைக்கும் ஒடுக்கப்பட்ட மக்களுக்காகப் போராடும் சக்தி பிரசுரித்திருக்கத் தேவையில்லை.

சக்தியின் நோக்கத்திற்கு எதிரான அடிப்படையை இக் கட்டுரை உள்ளடக்கி யிருப்பதுடன் நியாயப்படுத்தப்பட்டுள்ளது.

மேற்கு நாட்டு சினிமாக்கள் பலவற்றில் மூன்றாம் உலக மக்களின் ஜனநாயகத்தை மீட்கவெனக் கூறி மேற்கு நாட்டு ஆக்கிரமிப்பை நியாயப்படுத்த சில கதாநாயகர்களை முன்னிறுத்துவதனூடாக மூன்றாம் உலகம் மீதான ஆக்கிரமிப்பை சொந்த நாட்டிலும் மூன்றாம் உலக நாட்டிலும் நியாயப்படுத்துகின்றனர்.

இந்தவகையில் ரம்போ முதல் எண்ணற்ற இராணுவ நடவடிக்கை திரைப்படங்கள் மூன்றாம் உலகில் ஜனநாயகத்தை நிலைநிறுத்த போராடச் செல்வதாகப் பல நூறு திரைப்படங்கள் வெளியாகியுள்ளன. அது தொடர்ச்சியில் இராணுவக் கண்ணோட்டம் இழகிய மனங்களுக்கு முன் எடுபடாது எதிரான போராட்டங்கள் எழுந்தன/எழுகின்றன. இதைத் தணிக்க இன்று மருத்துவ உதவி , ஜனநாயகத்திற்குப் போராடுவது, உண்மையைச் சொல்லும் பத்திரிகையாளன் என பல திரைப்படங்கள் வெளிவந்துவிட்டன. இந்த இருவழிப் பாதைகளும் மூன்றாம் உலக நாடுகளின் ஜனநாயகப் பிரச்சினைமீது மேற்கு நாடுகள் அக்கறையாக இருப்பதாகக் காட்டவும் அதைச் செய்யவே தமது தலையீடுகள் அவசியமாகவுள்ளது என நிறுவவும் தொடர்ச்சியான பிரச்சாரங்களே இத் திரைப்படங்களின் அடிப்படை நோக்கமாகும். ரங்கூனுக்கு அப்பால் என்ற திரைப்படமும் இதையே செய்கின்றது. அதை நியாயப்படுத்தும் யமுனா ராஜேந்திரன் "எமது நாடுகளில் நிலவும் அடக்குமுறை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அமைப்புக்களின் தன்மையில் இத்தகைய கலைப்படைப்புக்கள் வெளிவருவது சாத்தியமில்லை. அத்தகைய சந்தர்ப்பத்திலேயே *ரங்கூனுக்கு அப்பால்* மாதிரி படங்கள் தருகின்ற அனுபவங்கள், சம்பவங்கள் போன்றவற்றை அங்கீகரித்துக் கொண்டு இவைகளை விமர்சன மூலமாகப் பார்ப்பதன் மூலம் நமக்கான கலைப் படைப்புக்களை சிறிய அளவிலே உருவாக்கிக் கொள்ள வேண்டும்" என்கிறார்.

இதுபோன்ற திரைப்படங்களை நாம் உருவாக்கலாம், சூழல் இல்லையென்று கூறியபடி விமர்சனக் கண்ணோட்டத்துடன் திரைப்படங்களை உருவாக்கவேண்டும் என்கிறார். பர்மிய மக்களின் போராட்டத்தை அதன் இரத்தம் சிந்திய வரலாற்றை எவ்வளவு கேவலமாக அமெரிக்காவுக்கு சார்பாக அமெரிக்கா தலையிட்டு உரிமை, ஜனநாயக த்தை பறைசாற்றக் கோரிய திரைப்படத்தை நல்ல படம் என்கின்ற சிறு விமர்சனத்தைப் பெயரளவில் வைத்தபடி. இதன் பின்னணியில் உள்ள நோக்கத்தைப் பார்ப்பின் "மாணவர்கள் கம்யூனிஸ்ட்டுகள் என இராணுவம் சொன்னதை நான் நம்பினேன் எனவே நான் மக்களைக் கொன்றேன்" என்ற காட்சிப் படிமமான வார்த்தை தான் எவ்வளவு கேவலமானது. அதாவது கம்யூனிசம் அல்லாத போராட்டத்தை அமெரிக்கா ஆதரிக்கும். அதற்காக அமெரிக்கா போராடும் என்பதைத்தான். யமுனா ராஜேந்திரன் எம்மைப் பார்த்து இதைப் படைக்கக் கோருகின்றார்.

ஒரு ஜனநாயக இயக்கம் கம்யூனிசத்தை எதிர்க்ககூடாது. அதுவரைதான் அது முற்போக்காக இருக்கும். இந்த ஜனநாயக இயக்கமும் லாராவின் மனித நேய உதவியும் கம்யூனிஸ்ட்டுகள் இல்லை என்பதால் எழுகின்ற அனுதாபத்துடன் கூடிய ஏகாதிபத்திய சார்பு நிலைதான். அதாவது கம்யூனிஸ்ட்டுக்கள் என்றால் கொல்ல முடியும் என்பதை லாராவின் கேள்வி புலப்படுத்துகிறது. அதாவது இப்போது இராணுவம் அப்படிச் சொன்னதை நம்புகிறாயா? என்றபோது இல்லை என்பதில் கம்யூனிஸ்ட்டுக்கள் என்றால் கொல்ல உரிமையும் நான் அதற்காகப் போராடப்போவதில்லை என்பதை லாராவின் கேள்வி இராணுவ வீரனின் பதில் தெளிய வைக்கிறது. இக் கருத்தைக் கொண்ட யமுனா ராஜேந்திரன் இதை நியாயப்படுத்த முன்வைக்கும் பிறிதோர் கருத்தைப் பர்ப்போம்.

"வளைகுடா யுத்தத்தில் பெரும்பாலான இடதுசாரிகளால் சார்பான நிலைப்பாட்டை எடுக்க முடியவில்லை . அமெரிக்க மேற்குலக தலையீட்டை விமர்சிக்க முனைந்தது ஆனால் சதாம் குசைனின் குவைத் படையெடுப்பை, குர்திஸ் மக்களை சதாம் கொன்று குவித்ததை இடதுசாரிகாளல் நியாயப்படுத்த முடியவில்லை.

இத்தயைக இடைவெளிகளில் பிரதேசங்களில்தான் மனிதவுரிமை அரசியலும் அதைப் பற்றிய கலைப் படைப்புக்களும் அதன்மேலான விமர்சனங்களையும் மீறி முக்கியத் துவம் பெறுகின்றது என்று இடதுசாரி இயக்கம் கோசமாக வைத்ததை இப்படியே விளங்கிக் கொள்ளமுடியும்" என அமெரிக்க சார்பை நியாயப்படுத்த அழகாக விளக்கம் கொடுக்கின்றார்

www.tamilarangam.net



அதாவது ஒரு பிரச்சினைமீது ஆம் அல்லது இல்லை என்ற முதலாளித்துவக் கோட்பாட்டை முன்வைத்து இடதுசாரிகளையும் அரசியல் விமர்சனங்களையும் கொச்சைப்படுத்தியபடி மனிதவுரிமையின் பெயரால் தலையீட்டை, ஆக்கிரமிப்பை நியாயப்படுத்துகின்றார்.

இலங்கை யுத்தத்தில் அரசு அல்லது புலிகள் இரண்டில் ஒன்றை ஆதரிக்க வேண்டும். அதில் இடதுசாரியின் நிலை என்ன? என்கிறார். இடதுசாரிகள் இருவரையும் ஏற்றுக் கொள்வதில்லை. ஏனெனில் இடதுசாரிகள் எப்போதும் ஒடுக்கப்பட்டவர் சார்பானவர்களே ஒழிய, ஆளும் வர்க்க அணியின் யுத்தம் சார்பாக ஒரு நிலையை எடுப்பது இல்லை. தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் ஒடுக்கப்பட்ட தமிழ் மக்களின் பிரதிநிதிகள் அல்ல என்பதால் அவர்களை விமர்சித்தபடி தமிழ் மக்களின் போராட்டத்தை ஆதரிக்கின்றனர்.

இது தமிழீழ விடுதலைப் புலிகளின் நிலையிலிருந்து வேறுபட்டது. இது சுயநிர்ணயம் என்ற கோட்பாட்டுக்குட்பட்டது. நாம் மொஸ்கோவுக்கோ ரங்கூனுக்கோ ஆதாரமாக இருக்கவேண்டும் என யமுனா ராஜேந்திரன் கோருவதும் இதில் ஏதாவது ஒன்று ஜனநாயகத்தின் பெயரால் தலையீட்டால் ஆதரிக்கக் கோருவது என்பது கடைந்தெடுத்த ஏகாதிபத்திய சார்பே. ஏனெனில் இன்று உலகிலுள்ள அனைத்து மனித உரிமை மீறல்களும் ஏகாதிபத்திய தயவின்றி -நேரடியாகவோ, மறைமுகமாகவோ- நடக்க முடியாது. இது குழந்தையைக் கிள்ளிவிட்டு தொட்டிலை ஆட்டுவதை யமுனா ராஜேந்திரன் ஆதரிப்பதால்தான் தனது இடைவிடாத முயற்சியை இடதுசாரியின் பெயரில் செய்ய முனைகின்றார். அதாவது ஆணாதிக்கத்தை பெண் எதிர்த்துப் போராடும்போது பெண்ணுக்கு அமெரிக்கா ஆதரித்தால் எதிர்க்கப் போகிறோமா? இல்லையா? என்ற கேள்வியை சக்தி முன்வைத்த பின் அதை ஏற்கவேண்டும் என்கிறார். இதுதான் அவரின் அரசியல் விமர்சனக் கலை. இதை அவர் இத் திரைப்படம் நமக்கு ஏற்படுத்துகின்ற சில காட்சிகள் தருகின்ற அரசியல் தத்துவ அனுபவங்கள் நம்மை நெகிழ்த்தி விடுபவை என்பதனூடாக அமெரிக்க சார்புத் தத்துவத்தை தத்துவ ரீதியல் அழகியல் ஊடாக புகுத்தும் தன்மைதான் மெச்சி அது நெகிழ வைக்கிறது என்கிறார். இந்தமாதிரியான மோசடித்தனங்களையும் ஏகாதிபத்திய சார்பை நியாயப்படுத்தும் கருத்துக்கு சக்தி இடங்கொடுப்பது நிறுத்தப்பட வேண்டும் என்பது ஒடுக்கப்பட்ட மக்கள் சார்பாகக் கேட்கத் தோன்றுகிறது. இது சக்தி முன்னுள்ள கோட்பாட்டுப் பிரச்சினையாகவும் உள்ளது.

அடுத்து அசோகபண்டாரகே எழுதிய கட்டுரையின் மொழிபெயர்ப்புக் கட்டுரையான பெண்ணியத்தை நோக்கி... என்ற கட்டுரையைப் பார்ப்போம். சர்வதேசப் பெண்ணியத்தை நோக்கி என்று தலைப்பிட்டு கட்டுரையின் இறுதியில் பெண்கள் விடுதலைப் போராட்டம் என்பது ஓரிடத்தில் உருவாக்கப்பட்டு மற்றைய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக் கூடிய கொள்கையல்ல. அந்தந்த நாட்டுக் கலாச்சார சூழல்

www.tamilarangam.net

அடிப்படையில் உருவாக்கப்பட வேண்டிய ஒன்று என தலைப்புடன் முரண்படுகிறது. அதாவது இக் கோட்பாடு பின் நவீனத்துவத்தின் பின்னால் கட்டியமைக்கப்படுகிறது.

ஒரு பிரச்சினை உலகளவில் பொதுவாக இருந்தால் அதன் பொது அடிப்படை உலகளாவிய ரீதியல் பெறுவது பெண் ஒடுக்குமுறை அதாவது ஆணாதிக்கம் உலகில் பொதுவானது. அது அமெரிக்காவில் ஏகாதிபத்திய கலாச்சாரம் முதல் இந்தோ சீனா அடர்காடுகளில் வாழும் மக்கள் எல்லோருக்கும் பொதுவானதாக ஒரேவகைப்பட்ட ஒடுக்குமுறையாக காணப்படுகிறது. இதன் ஒடுக்குமுறை வடிவம் மட்டும்தான் ஒவ்வொரு நாட்டு சமூக பொருளாதார கலாச்சாரத்துடன் வேறுபடுகிறது. எனவே பெண்விடுதலைக் கோட்பாடு உலகளவில் பொதுவாகவும் நாட்டுக்கு நாடு விசேட விடயங்களை உள்ளடக்கியதே தவிர கலாச்சார வேறுபாட்டை அடிப்படையாகக் கொண்டவையல்ல. கலாச்சாரம் என்கின்ற போது மதம் மற்றும் பொருளாதார அடிப்படையாகக் கொண்டது. ஒருபோதும் ஒரு சரியான பாதை கலாச்சாரத்திற்கு ஊடாக அடைந்து விடமுடியாது. கலாச்சாரம் என்பது பிற்போக்கின் மீது கட்டப்பட்டவைதான். எனவே பிற்போக்குக் கலாச்சாரத்தை கடக்க வேண்டின் முற்போக்கு கலாச்சார உலகில் ஒன்றாக இருக்கமுடியுமே ஒழிய வேறுபட்டு இருக்க முடியாது. வேறுபட்டு இருக்க முடியும் என வாதிடின் அது இனம், நிறம், பொருளாதார வேறுபாடாக அர்த்தப்படும்.

அடுத்து வர்க்கம் பற்றிய சொற்பதத்தில் பேசியபடி பொதுவான பெண்கள் அமைப்பைத் தேடவேண்டும் என போதிக்கப் படுகிறது. அதாவது வர்க்கத்தைக் கடந்த பொதுவான பெண்கள் அமைப்பு என்பது ஆளும் வர்க்கப் பெண்களின் சார்பானதே தவிர அடிப்படைப் பெண்கள் சார்பானதல்ல. இதை அவர் “சமகாலப் பெண்ணியப் போராட்டம் உலகளாவிய வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த போராட்டமாகும். இது மனித உறவுகளை மேம்படுத்த வகைப்படுத்தக் கூடிய குணாம்சம் கொண்டவை. பெண்களின் கலாச்சார பொருளாதார ஏற்றத்தாழ்வுகளைக் கணக்கில் கொண்டு நடைமுறைப் படுத்தக் கூடிய ஒரு பெண்ணிய அமைப்பு உருவாக்கப்படவேண்டும்” என குரல் கொடுக்கிறார்.

பெண்ணின் ஏற்றத்தாழ்வான கலாச்சார பொருளாதார வேறுபாடுகளைக் கடந்த பெண்கள் அமைப்பு வேண்டும் என்பதன் மூலம் வர்க்கப் போராட்டம் அல்லாத சமரசத்தைக் கோருகின்றார். இதைத்தான் இன்றைய முக்கியத்துவம் வாய்ந்தது என்கிறார். அதாவது இன்றைய உலகப் பொருளாதார அமைப்பின் ஏற்றத்தாழ்வை எல்லாத் துறையிலும் தகர்க்காத பொதுவான பெண்கள் அமைப்பைக் கோருவது என்பது மிகக் கீழ் நிலையிலுள்ள உண்மைகளையும் அடிமட்டப் பெண்களையும் ஏமாற்றும் முயற்சியாகும்.

அடுத்து லெஸ்பிசம் இச் சூழ்நிலையில் நடைமுறையில் இருப்பின் அதற்கான அரசியல் பார்வை இங்கு வைக்கப்படவில்லை என கட்டுரையாளர் குறிப்பிடுகின்றார்.

www.tamilarangam.net



தொடர்ந்து கணவன்-மனைவி அடிப்படையிலான வாழ்க்கைத் துணைநல உறவு பல சமூகப் பெண்களுக்கு ஒரு முக்கிய உறவாக அமையாது உணர்வு பூர்வமான பல தேவைகள் மற்றைய பெண்களுடனான இவர்களது உறவில்தான் பெறப்படுகிறது என்கிறா்ா.

கட்டுரையாளர் ஆண்களின் ஆணாதிக்கத்தை நியாயப்படுத்த மறைமுகமாக பெண்களே நீங்கள் நீங்களாவே முரண்படாது விலகிச் செல்லுங்கள் என்கிறார். பெண்பாலியல் உறவுக்குட்பட்டால் தற்கொலை தீர்வு. ஆணின் உறவில் ஏற்படும் கருவை அழிப்பது தீர்வு. பெண்-பெண் உறவு என முன்வைக்கப்படும் மாற்றுத் தீர்வுகள் ஆணாதிக்கத்தின் இருப்பை கேள்விக்குள்ளாக்கத் தக்கதா? அதிலிருந்து கண்ணை மூடி பால் குடிக்கும் பூனைபோல கண்ணை மூடி விலகிச் செல்லும் தீர்வை முன்வைப்பது இன்று இருக்கும் ஆணாதிக்க உலகப் பொருளாதார அமைப்பை பாதுகாக்கும் அல்லவா?

பெண்-பெண் உறவு, ஆண்-ஆண் உறவு என்பன ஆணாதிக்கமும் சுரண்டல் சமூகமும் கொடுத்த கொடைகள்தானே தவிர அதற்கு வெளியில் கண்டுபிடிக்கப்பட்டவை யல்ல. ஆணாதிக்கம்தான் பெண்களை தனியாக்கி சொத்தாக்கிய பொருளாக சுரண்டலுக்கு உட்படுத்தும் அமைப்புத்தான் ஆண் பெண்ணின் இயல்பான பாலியல் உறவுகளைக் கண்ணி வைத்தும் நலம் அடித்தும் பிளவுபடுத்தின. இதை முடிக்கத்தான் ஆண் ஆணுக்கு இடையேயும் பெண் பெண்ணுக்கு இடையேயும் உறவு முடக்கப்பட்ட நலம் அடித்த பாலியல் வேட்கையை தீர்த்துக் கொள்ள வழியே தவிர இதற்கு வழியல்ல. இந்த மனிதர்களின் இயல்பான உணர்ச்சி மட்டுப்படுத்தப்படின் எதிர்த்துப் போராட வேண்டிய சமூகம் அதற்குள்ளேயே தீர்வை தேடி முன்வைத்தபோது அதை பெண்விடுதலையின் அங்கமாகவும் அல்லது ஏதோ ஒருவிதத்தில் நியாயப்படுத்துவது என்பது அடிப்படையில் ஆணாதிக்கத்திற்கு சார்பானது. அதைக் கேள்விக்குள்ளாக்குவது அதை நொருக்காது பேணமுயலும் வழிகளாகும்.

ஆண் பெண்ணுக்கு இடையில் ஆணாதிக்க சுரண்டல் அமைப்பு ஏற்படுத்திய பிளவை பெண்மீதான ஆணாதிக்க சுரண்டல் அமைப்பு ஏற்படுத்திய பிளவை பெண்மீதான ஆணாதிக்க சுரண்டல் சமூக ஒடுக்குமுறையை தகர்க்கும் போது ஆண்-பெண்ணுக்கு இயற்கையாகவே உள்ள பரிமாணத் தெரிவான உணர்ச்சி தடுக்கப்படாத ஒரு சமூகத்திற்குப் பதில் அதை எதிர்த்துப் போராடுவதன்மூலம் ஒரு சரியான அரசியல் மார்க்கத்தை முன்வைத்து ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையேயான இடைவெளியைத் தடுக்கவும் பெண்மீதான ஒடுக்குமுறையை ஒழித்துக்கட்டவும் போராடுவதே எம்முன் உள்ள ஒரே பணியே ஒழிய, அதைவிடுத்து இருப்பதை அங்கீகரித்து அதை நியாயப்படுத்தி அதற்கூடாக ஆணாதிக்கத்திறகு வக்காலத்து வாங்குவது அல்ல.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

குறிப்புகள்,
ஒரு பொருளின் இரு போக்குகள் என்று பின்நவீனத்துவம் நியாயப்படுத்துவதுதான் ஒடுக்கப்பட்ட மக்களின் போராட்டத்தை ஏகாதிபத்தியத்திற்கு சார்பாக மாற்றக் கோருகின்றது. அதாவது யமுனா ராஜேந்திரன் முன்வைத்த ரங்கூன் சினிமா அமெரிக்காவுக்கு சார்பாக அதேநேரம் அங்குள்ள ஜனநாயகப் போராட்டத்தை சித்தரிப்பதாய் இரட்டைத் தன்மை கொண்டவை. ஆகவே அதில் நல்ல அம்சம் உள்ளது, எனவே திரைப்படத்தை ஜனநாயத்தின் பெயரால் நாம் ஏற்றுக் கொள்ளவேண்டும் என்கிறார். இது பின்நவீனத்துவத்தின் இழிநிலை பாத்திரத்தைக் காட்டுகிறது. இது இன்று பணம் வாங்கி மூன்றாம் உலகநாடுகளில் இயங்கும் தன்னார்வக் குழுக்களின் செயற்பாடு, அன்னை தெரேசாவின் காட்டுமிராண்டித் தனமான கத்தோலிக்க மதச்சார்பான செயற்பாடுகள், டயானாவின் ஆடம்பரத்தில் மக்கள் மீதான தொழிற்பாடு, எம்.ஜி.ஆரின் சினிமாத்தனமான செயற்பாடுகள் என அனைத்தையும் அங்கீகரிக்கக் கோருவதாகும். அதாவது இரண்டும் உண்டு. நல்லதை உயர்த்தி அவர்களைப் போற்றுவோம் என்கின்றார்கள். இது பின்நவீனத்துவக் கோட்பாட்டின் பின் நின்று ஏகாதிபத்தியத்துக்கு சேவைசெய்யும் செயலாகும்.

---

*புதிய வரவு...*

*.........*

*எத்தனை காலந்தான்*
*இழுபட்ட போலி வாழ்வு*
*வறட்டுத்தனங்களும்*
*சுயநலப் போக்குகளும்*
*வக்கிர எண்ணங்களும்*
*சூழ்ந்து கொண்ட*
*கொடுமை வாழ்வு.*

**கனல்**

(கவிதைத் தொகுப்பு)

| வெளியீடு : சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம் |
|---|

*தளைகளை அறுத்தெறிந்து*
*சுதந்திரமாய்*
*"நானொருவள்" என*
*வாழ்ந்து காட்ட முயற்சிக்கிறேன்.*

*.........*

சுதாகரி சுப்ரமணியம்
விஜயலட்சுமி கந்தையா
ஜெயந்தி தளையசிங்கம்
சுதாகினி சுப்ரமணியம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# *பாலரஞ்சனி சர்மா கவிதைகள்*

ஆடுகள் தினவெடுக்க
கல்லறை ஈந்த
இறந்த மனிதனே! நீ வாழி!

கும்மிருட்டுப் பாதையில்
வழி சொன்னது
மின்மினிக் கூட்டம்

மஞ்சள் தானே மங்கலம்
மகரந்தம் சுமந்து புக்கணவன் தேடும்
வண்டுக் காதலியன் பாட்டு.

காலை எட்டிப்போட்டும்
பயனில்லை,
கூடவே வரும் நிழல்

வெள்ளி எல்லை
இயற்கைக்குப் போட்டது
நீயா நிலவே!

மானுடனே!
பார்த்து ஒதுங்கி நட!
பாதையெங்கிலும் வசந்த (பிப்) படுக்கை1

மிதிக்காதே!
திட்டுகிறதே சருகு!
கேட்கலை?

கீழிருந்து கத்தினாலும்
பயனில்லை பூனையே!
ஆன்டெனாவில் அணில்!

எப்படி மனம் வந்தது வசந்தத்துக்கு
இத்தனைப் பூக்களையும்
நிலத்துக்குச் சமர்பிக்க

தேவை ஒரு துணை
வேறுவழியில்லை
வா! தனிமையே

நாற்று நடும் போது பாடினாய்!
இப்போ காற்றின் பாட்டுக்கு
நாட்டியமாடிடும் கதிர்கள்

www.tamilarangam.net

என்ன தப்புச் செய்து
தனக்குத்தானே சிறை கட்டுது
சிலந்தி.

விடியலாய் உனை நினைத்த
விட்டிலையுமா கொன்றாய்
ஏ..........விளக்கே.

சமூகமே! என்
உடலைத்தான் விற்கமுடியும் உன்னால்
என் நிழலையல்ல.

ஐயோ பாவம்!
கால்பட்டு காணாமல் போனதே
பனித்துளி.

பசிதீர்க்கத்தானே கதிர்
பசியால் வயல் மேயந்த
மாட்டினை அடிக்கிறாயே!

கும்மிருட்டில்
குளத்துக்கான எல்ரலயாய்
தவளைகளின் கூக்குரல்

மேகமே!
யார் தந்தது தைரியம்?
நலவுக்கே திரையிடுகிறாயே!

துளை ஒன்று தான்
ஓடம் மூழ்க
புல்லாங்குழல் மாத்திரம்.?

உஷ்! சத்தம் போடாதே!
கீழே
எறும்புகளின் மௌனயாத்திரை.

உழுது ஓய்ந்து நின்ற
உழவன் மீதும் குருவிகள்
வெருளியாய் நினைந்து

கப்பல்ஆ விடும்
ஏழைச்சிறுமியின் சந்மேதாசம்
வீட்டுக்குள்ளே வெள்ளம்.

தலையை சிலுப்பாதே மரமே!
உன் நிழலில்
மழைக்காய் ஒதுங்கிய சிறுவர்கள்

ஓ! உன் மனைவி கர்ப்பமா?
காகத்தின் சொண்டில்
சுள்ளிகள்

மண்ணுக்கு வலித்தது
வேரின்
ஊடுருவலால்!

www.tamilarangam.net



# சர்வதேசப் பெண்ணியத்தை நோக்கி...

(இக் கட்டுரை Sangharsh என்ற பத்திரிகையில் 1984 இல் வெளிவந்திருந்தது. இதை எழுதியவர் அசோகா பண்டாரகே. இவர் அமெரிக்காவில் வாழும் இலங்கைப் பெண்மணியாவார்.)

## Towards International Feminism

*சென்ற இதழ்த் தொடர்ச்சி*

*முதலாளித்துவமும் பெண்ணியமும் ஒன்றுடன் ஒன்று இணையக் கூடியதா?*

பெண்ணியத்தினை ஆழமாக விளங்கிக் கொள்ள அதன் வளர்வுக்கான திட்டங்களை நாம் எங்கு தேடலாம். சில மாற்றுச் சிந்தனைப் பெண்ணியக் குழுக்கள் பெண்ணியத்தைப் பற்றிய பார்வையில் வித்தியாசமாக இருப்பதுடன் பல்சமூக, இன பெண்களை உள்ளடக்கக் கூடிய சாத்தியக் கூறுகளை வெளிப்படுத்துகின்றனர்.

பெண்களின் பெரும்பகுதியினர் ஏன் ஆண்கள் கூட சமனற்ற, சுரண்டல்கள் நிறைந்த முதலாளித்துவ அமைப்பில் தங்கள் விடுதலையை சம்பாதித்துக் கொள்ள முடியாதென்பது நீண்டகால சோசலிசவாதம். சோசலிச பொருளாதார உற்பத்தியில் பெண்கள் தங்களை இணைத்துக் கொள்வது அவர்களது சுதந்திரத்திற்கான முன் தேவை என்பது அவர்களது வாதம். இது பூர்சுவா அல்லாத பெண்களுக்கு மாத்திரம் பொருந்தும் என்பதும் அவர்கள் குறிப்பு. முதலாளித்துவப் பொருளாதார விருத்தியில் பெண்கள் நிலை குறிப்பாக மூன்றாவது உலக நாடுகளில் பொருளாதார விருத்தியின் மாற்றங்கள் பற்றிய பெண்ணிய ஆய்வு சோசலிசக் கருத்திற்கு மீண்டும் வலுச் சேர்க்கின்றது.

மூன்றாவது உலக நாடுகளின் முதலாளித்துவப் பொருளாதார வளர்ச்சி பெண்களின் திறமைகளை வெளிப்படுத்தும் வேலைகளல்லாத சிறு ஊதிய வேலைக்கோட்டின் கீழேயே வைத்திருக்கின்றது. ஒருசில பெண்களே திறமையினை வெளிக்கொண்டு வரக்கூடிய பதவிகளிலும் பெரும்பாலானோர் வேலைக்கேற்ற ஊதியமற்ற உதவித் தொழிலாளராக, வீட்டுப் பணிப் பெண்களாக அன்றேல் பாலவினைத் தொழிலாளி (prostitute) போன்ற வேலைகளையே பெற்றுக் கொள்ளக் கூடியதாக



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இருக்கின்றது. தனிச்சொத்துடமை, கூலிவேலை, புதிய தொழில் நுட்பம், பண அடிப்படைத் தொடர்புகளின் வளர்ச்சி என்பன பெண்களின் -ஏற்கனவே இருந்த- சுதந்திரத்தையும் பறித்துக் கொண்டு மரபுரீதியான குடும்பத்தின் தலைமை உற்பத்தியாளர்கள் என்ற நிலையையும் குறைத்துவிட்டது. இந்தியாவில் ஆண், பெண் இருபாலார்க்கிடையிலும் நம்பிக்கையற்ற நிலைமையையும் நாளாந்த வாழ்க்கைக்கான போராட்டத்தையும் புதிய பொருளாதார வளர்ச்சி சில பத்தாண்டு காலங்களில் அதிகரிக்கவே செய்துள்ளது.

1980 இல் அரைப்பத்தாண்டு மகாநாட்டில் பெண்கள் உலகின் அரைப்பங்கினராகவும் உலக வருமானத்தில் நூறிலொரு பங்கினை வைத்திருப்பவர்களாகவும் கணக்கிடப்பட்டது. மூன்றில் ஒரு பங்கிற்கு குறைவான பெண்களே கல்வியறிவு பெற்றவர்களாகவும், ஆபிரிக்க ஆசிய நாடுகளில் பத்திலொரு பெண்ணே பாடசாலை போகும் வாய்ப்பினைப் பெற்றிருப்பதாகவும் அறியப்பட்டது. "மூன்றாம் உலக நாடுகளில் ஏழ்மையை பெண்கள் மயப்படுத்துவது'' முதலாளித்துவப் பொருளாதாரக் கட்டுமானத்தின் முக்கிய குறிக்கோள். ஐக்கிய அமெரிக்கக் குடியரசிலும் ஐரோப்பியாவிலும் இந் நிகழ்வு ஆரம்பமாகி பெண்கள் கீழ் வகுப்பினராகப் பெருந்தொகையில் ஒதுக்கப்படுகின்றனர். இதற்குக் காரணம் குடும்பம்சார் கட்டுமானமும் வீட்டுப்பணிகள் பெண்களின் வருமானமற்ற வேலை என்ற முதலாளித்துவக் குறைபாடுமே காரணங்களாக அமைகின்றன.

பெண்களுக்கெதிரான அமைப்பு ரீதியான ஒடுக்குமுறை நீண்டகாலப் போராட்ட நோக்குக் கொண்ட சோசலிச ஆய்வுப் பார்வை இங்கு அதிகளவிலேயே முக்கியத்துவம் பெறுகின்றது. ஆனால் நடைமுறைக்குச் சாத்தியமான சோசலிசப் புரட்சிக்கான திட்டங்கள் இல்லாவிடில் சோசலிசப் பார்வை வறிய பெண்களின் நாளாந்த யதார்த்த நிலையைக் கண்டுகொள்ளாது நழுவிப் போவதாகிவிடும். தற்போதைய வறிய நிலையில், வேலையில்லாத் திண்டாட்டம் போன்றவைகளுக்கு மத்தியில் பட்டினி கிடப்பதை விடப் பெண்கள் தங்கள் உழைப்பில் சுரண்டல் நடப்பினும் அதனையே தேர்ந்தெடுப்பர். ஒரு விவசாயக் கூலியாகவோ அன்றேல் பாலியல் உல்லாசப் பிரயாணிகளின் (sex tourist) "துணை"யாகவோ இருப்பதை தங்கள் முன்னுரிமையாகவே கருதுகின்றனர். பல மூன்றாம் உலக சோசலிசக் கருத்துக் கொண்ட நாடுகளென்று தங்களை அழைத்துக் கொள்பவை -சீனா போன்ற நாடு கூட- முதலாளித்துவப் பொருளாதாரத்தின் அழுத்தங்களிலிருந்து தம்மை இன்றளவும் விடுவித்துக் கொள்ள இயலவில்லை. இதுபோன்ற பாரிய தடைகள் ஒரு முதலாளித்துவ அமைப்பிலிருந்து சோசலிசத்தை உருவாக்குவதின் கடினத்தைக் கூறி நிற்கின்றன.

சோசலிச பெண்ணியப் பார்வையைக் கைவிடாத அதேவேளையில், பெண்கள் நிலையில் மாற்றத்தை விளைவிக்கக் கூடிய தற்போதைய காலகட்டத்திற்கமைய வேலைத்திட்டங்களை வைப்பது இங்கு உடனடித் தேவையாக இருக்கிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மேற்சொன்ன வேலைத்திட்டங்கள் பெண்கள் கல்வி, தொழிலுக்கான கடனுதவி, சர்வதேச ரீதியில் பெண்களின் திறமைக்கான வாய்ப்புக்கள் என்பன உள்ளடக்கப்பட வேண்டும். பெண்கள் தேவைகளும் புதிய சர்வதேசப் பொருளாதாரக் கொள்கையினுள் சேர்த்துக் கொள்ளப்பட்டு, நவீன மயப்படுத்திய தகவல்கள் வலைப்பின்னல் அமைப்பிலும் பெண்கள் பங்கு இருக்க வேண்டும். பல்நாட்டு வியாபார அமைப்புக்களின் கொள்கை வகுப்பு முகாமைத்துவம் இவைகளிலும் பெண்கள் இடம்பெற வேண்டும்.

கருத்தில் எடுக்க வேண்டிய இன்னும் ஒன்று என்னவெனில், வறிய மூன்றாம் உலகப் பெண்கள் பட்டினிக்கும் சுரண்டலுக்கும் இடையில் சுரண்டல்கள் இருப்பினும் ஓர் வேலையைத் தேர்ந்தெடுத்துக் கொள்பவர்களாயினும் அறியாமையில் மூழ்கி தங்களுக்கெதிரான சுரண்டலையோ அன்றேல் மாற்றத்திற்கான தேவையையோ அறியாதவர்களல்ல. இவர்களது துணிவும் திறமையுமே மூன்றாவது உலக நாடுகளிலும் சரி மேற்கிலும் சரி தாங்கள் சார்ந்த சமூகங்களின் வாழ்நிலைத் தொடர்ச்சிக்குக் காரணமாக இருந்ததென்பது சரித்திர பூர்வமான உண்மை. இவ்வாறான துணிவு, நம்பிக்கை, திறமை என்பனவற்றின் அடிப்படையில் கிழக்காசியப் பெண்கள் பல்நாட்டு நிறுவனங்களில் திறமைக்கேற்ற பதவிகளை அடைந்துள்ளனர். எண்ணிக்கையில் சிறியவையாயிருப்பினும் கால முக்கியத்துவம் வாய்ந்த சம்பவங்கள் நம்மை வந்து எட்டாமலுமில்லை.

மேற்கத்திய நாடுகள் மூன்றாம் உலக நாடுகளில் அணு ஆயுதப் பரிசோதனைகளை நடத்துவதையும், கதிரியக்கக் கழிவுகளைக் கொட்டுவதையும் எதிர்த்தும், குடும்பக் கட்டுப்பாட்டை பிழையாக தனது நாட்டிலும் மூன்றாம் உலக நாடுகளிலும் பாவித்ததை எதிர்த்தும் உலகாளாவிய விதத்தில் பெண்கள் தங்கள் எதிர்ப்பைத் தெரிவித்ததும் இந்தத் துணிவின் அடிப்படையிலேதான்.

சோசலிசவாதிகள் பார்வை பற்றிப் பார்க்கும் போது முதலாளித்துவத்தின் பெண்ஒடுக்கு முறைக்கு சமூக பொருளாதாரக் காரணிகள், வர்க்கப் பிரிவினைகள் காரணமெனக் கூறுவதோடு நின்று விடுகிறது. கலாச்சார, உளவியல் ரீதியான வேர்கள் அடக்கு முறையில் வகிக்கும் பங்கினைப் பற்றிய அறிவை அவர்கள் அங்கு காட்டவில்லை. இந்தக் குறைபாடு "சோசலிச" சோவியத் ஒன்றியத்துப் பெண்களின் அனுபவத்தில் வெளிப்படுகின்றது. வேலைத்தளங்களில் ஆண், பெண் பால் வித்தியாச அதிகாரப் படிநிலைமை ஆண்பாலாரின் ஆதிக்கப் படிநிலைமை, வீட்டு வேலைகளில் ஆண், பெண் இருபாலாரும் சமமான பங்கு வகிக்க வேண்டும் என சட்டமூலம் பலப்படுத்தப்பட்ட கியூபாவின் சோசலிசக் கொள்கை எமக்குப் படிப்பினையாக விளங்குகின்றது. பெண்களும் சரிசமமாக சமூக உற்பத்தியில் உள்வாங்கப்படுதல், சட்டம் மூலம் அதனைப் பலப்படுத்தல் மாத்திரம் பாலியல் உயர்வு தாழ்வுகளைத் தனிப்பட்ட வாழ்க்கையில் களைந்தெறிய வழிநிற்காது.

சோசலிச நாடுகளின் பெண்களின் அனுபவங்களும் நடுத்தர வர்க்க மேற்கத்திய முதலாளித்துவ சமூகப் பெண்களினதும் மூன்றாம் உலக நாட்டுப் பெண்களினதும்

www.tamilarangam.net

அனுபவக் கோர்வையையும் பார்க்கும் பொழுது முன்னோடிக் காரணியாக இருந்தும் இது மாத்திரம் ஓர் பெண் சுதந்திரமான பெண்ணாக வாழ்வதற்குப் போதுமானதாக அமையவில்லை என்ற அடிப்படையை அறிந்து கொள்ளக் கூடியதாகவிருக்கின்றது. பெண்கள் மீதான பாலியல் வேறுபாடு, பால்பிரிவினைச் சார்ந்த நடைமுறைகளை சமூகத்திலும் தனிப்பட்ட வாழ்க்கையின் மிக அந்தரங்கமான நிலையிலும் கூடப் போராடி அழிக்க வேண்டும் என்ற தீவிர பெண்ணியத்தின் கோட்பாட்டிற்கு உண்மையாகின்றது. sexism என்பது ஓர் சமூகவியல் சார் குறைபாடல்ல. மிக ஆழமான உளவியல் காரணிகளைக் கொண்டதொரு விடயம்.

பெண்ணியக் கோட்பாடுகள், லிபரல் பெண்ணியம், தீவிரப் பெண்ணியம், சோசலிசப் பெண்ணியம் என்று இன்று பெண்ணியம் எல்லா அமைப்புக்களுமே தனியாகத் தங்கள் கொள்கை கோட்பாட்டு, சிந்தனைப் பலத்தில் சரியான தீர்வை வைக்க முடியாதிருப்பதால் மேற்கத்தியப் பெண்ணியப் பெண் புத்திஜீவிகள் மார்க்சிய, சோசலிச, தீவிரப் பெண்ணியவாத அடிப்படைகளில் அடக்கு முறைக்கெதிரான கூட்டுக் கொள்கைகளை வடித்தெடுக்கும் முயற்சியைத் தொடங்கியுள்ளனர். மார்க்சிய பெண்ணிய கூட்டுக்கொள்கை பெண்ணின் பின்னடைவு நிலையினை முரண்பாடுகள் பின்னிப் பிணைந்த விவாதத்திற்குரிய பிரச்சினையாய் இனங்காட்டுகிறது.

குடும்ப அமைப்பினுள்ளே (இன உற்பத்தி தொழிலாளர் தேவையை பூர்த்தி செய்யும் மறுஉற்பத்தி) சமூக உற்பத்தியும் சந்தை உற்பத்தியுமே அவை எனவும் இக் கூட்டுக் கொள்கையின் மிகச் சுருங்கிய சாரமாகக் காட்டுகிறது. எதிர்பாராத கூட்டு முயற்சி மார்க்சியப் பெண்ணியக் கொள்கையும் அதேபோன்று லிபரல் தீவிரப் பெண்ணியக் கொள்கையும் மேற்கத்திய முதலாளித்துவ வளர்ச்சியினூடான சம்பவங்களின் அடிப்படையிலேயே தங்கள் அனுபவங்களினுடான ஆய்வு முயற்சிகளில் இறங்கியிருக்கின்றன. வீட்டுப் பணி பற்றிய விவாதம் ஆண் தலைமைத்துவம் ஆணை மையப்படுத்திய குடும்பத்தின் மனைவி பற்றியதாகத்தான் இருக்கிறது. இந்த நிலைப்பாடு, சரித்திர கலாச்சாரத் தனிச் சிறப்பிற்குச் சாட்சி சொல்பவை. மார்க்சிய பெண்ணியக் கூட்டுக் கொள்கை முயற்சி மூன்றாவது உலக நாடுகளின் முதலாளித்துவ வளர்ச்சி கலாச்சார மாற்றங்கள் மேற்கிலும் வித்தியாசமான யதார்த்திலுள்ள பெண்களைப் பொறுத்தமட்டில் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே பொருந்தும் தன்மையுடையதாகக் காணப்படுகிறது. அதேபோல் மார்க்சியப் பெண்ணியம், மார்க்சியம் மற்றும் பல மற்றைய மேற்கத்திய கொள்கைகளும் கூட மூன்றாவது உலக நாட்டுப் பெண்களின் பிரச்சினைகளான இனவாதம், ஏகாதிபத்தியம் பற்றி ஓர் ஒத்திசைவான ஆய்வினை வெளிக்கொணரும் சக்தியற்றவை.

இது இவ்வாறு இருப்பினும் மூன்றாவது உலக நாட்டுப் பெண்கள் பற்றிய மனித இனமரபுகள் பல்வேறுபட்ட கலாச்சாரத்தில் செயற்படும் விதம், மார்க்சியப் பெண்ணியக் கோட்பாடுகளின் ஆய்வு கவனத்தைத் தூண்டுவதும் நம்பிக்கை ஊட்டுவது மாயிருக்கிறது. பல்நாட்டு நிறுவனங்கள் ஆடை உற்பத்தி, மின்அணுவியல் சாதனங்கள் போன்றவற்றை சுதந்திர வர்த்தக வலையங்களிலும் பசுமைப்புரட்சி உல்லாசப்

www.tamilarangam.net



பிரயாணத்துறை போன்றவைகளின் தாக்கங்கள் பெண்களின் வாழ்வில் என்ன மாற்றத்தை ஏற்படுத்துகிறது என்பது இவர்களின் ஆய்வு. மேற்சொன்ன காரணிகள் பெண்களை முதலாளித்துத்தில் தங்கியிருக்கும் திட்டமாகவும் அமைகிறது. மார்க்சிய பெண்ணிய ஆய்வுகள் மூன்றாவது உலக நாடுகளில் தொடக்க நிலையில் தான் இன்னும் இருக்கின்றன.

மேற்கிலும் சரி, மூன்றாவது உலக நாட்டிலும் சரி விரிந்து வரும் முதலாளித்துவ உற்பத்தி பெண்கள் வாழ்வில் என்ன தாக்கத்தை ஏற்படுத்துகின்றது என்று ஆராய்வதோடு நின்று விடுகிறது. காலச்சார ரீதியாக, சித்தாந்த ரீதியாக குடும்ப அமைப்பு போன்றவைகளால் பெண் எவ்வாறு ஒடுக்கப்படுகிறாள் என்பதை தங்கள் ஆய்வுக்குட்படுத்துவதில் சட்டை பண்ணவில்லை. மனித இனமரபுகள் பல்வேறுவித கலாச்சாரங்களால் செயல்படும் விதத்தோடு மார்க்சியப் பெண்ணியக் கோட்பாட்டை இணைத்து பெறப்படும் ஆய்வு மூன்றாவது உலகம் பற்றிய தற்போதய ஆய்வுகளில் உள்ள குறைபாட்டை நிவர்த்தி செய்யும்.

இந்தக் காரணத்திற்காகவே மேற்குலக ஆதரவாளர்களும் அனுதாபிகளும் தங்களது தலையீடுகளில் அதிக கவனம் செலுத்த வேண்டும். உ-ம் மேற்கத்திய பெண்ணிய வாதிகள் பெண் சுண்ணத்து (Circumcision)க்கு எதிராக மிக ஆக்ரோசமான எதிர்ப்பைத் தெரிவித்தனர். இதேபோன்ற ஆக்ரோசமான எதிர்ப்பை இவர்கள் கட்டாய கருத்தடை பல்நாட்டு நிறுவனங்களின் அபாயகரமான இரசாயன மருந்துக் கழிவுகளை கொட்டுதல் போன்ற பல்வேறுபட்ட மனித இனத்திற்கெதிரான துஷ்பிரயோகங்களை -மேற்கத்திய பொருளாதார அரசியல் கருத்தியல் நிறுவனங்களின் அளவான- ஆக்ரோசத்துடன் கண்டிக்கவில்லை.

தேசிய, சர்வதேசியப் பெண்ணிய, மார்க்சிய அல்லது சோசலிச அமைப்புக்கள் தெளிவான விளக்கத்தை முன்வைத்து மேற்கத்தியப் போக்குகளுக்கெதிராகப் போராடாவிடினும் பல அமைப்புக்கள் இலைமறையாகத் தங்களை இனங்காட்டி நிற்கின்றன. பல சர்வதேச சுகாதாரப் பெண்களமைப்புக்கள் நெஸ்லேக்கு எதிரான நுகர்வு மறுப்புப் (Boycott) போராட்டம், அமெரிக்காவில் தடைசெய்யப்பட்ட DEPO-PROVERA என்ற மருந்தினை மூன்றாம் உலக நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதை எதிர்த்தும் பிரச்சாரம் செய்தன. மருந்து உற்பத்தி நிறுவனங்களின் முதலாளித்துவப் பாலியல் சித்தாந்த (Sex Ideologies) ரீதியான சமூக, மருத்துவ பார்வையை எதிர்த்தும் சர்வதேச அமைப்புக்கள் கருத்தடை என்ற பெயரில் பெண்களின் உயிர்களின் மீதான அவர்களது கட்டுப்பாட்டை விளக்கியும் தங்கள் போராட்டத்தை முன்னெடுத்தனர். இந்த பன்முகப் போராட்டம் சர்வதேச ரீதியில் பல அடிப்படைப் பெண்களமைப்புக்களின் தோழமையினை உலகளாவில் பெற உதவியது. மேற்கில் இராணுவமயமாக்கலுக்கு எதிராக தொடங்கப்பட்ட பெண்ணிய அமைப்புக்களின் போராட்டத்தைக்கூட சமூக பொருளாதார அடிப்படை களுக்கு எதிராகவும் ஆயுதப் பரிமாற்றங்களுக்கு எதிராகவும் திருப்புவதன் மூலம் மேலும் பல்வேறுபட்ட பெண்ணிய அமைப்புக்களின் ஆதரவைப் பெற்றுத் தரும்.

www.tamilarangam.net

*பெண்ணிய அமைப்புகளுக்கிடையே நிலவும் ஏற்றத்தாழ்வுகள், கருத்து வேறுபாடுகள் என்பனவற்றை சீர்தூக்கிப் பார்க்கும்போது எல்லாப் பெண்களினதும் எல்லாப் பிரச்சினைகளுக்கும் எதிராக குரல் கொடுக்கக் கூடிய ஓர் பெண்களமைப்பு உருவாகுவது சாத்தியமா?*

கலாச்சார ரீதியாக பாலியல் வேறுபாட்டு அடிப்படையில் அடக்குமுறையை அனுபவிக்கும் பெண்கள் அந்தச் சமூகத்திலேயே அதற்கெதிராகப் போராட தங்களை ஒன்றிணைத்துக் கொள்ள வேண்டும். தனித்தனியான பெண்களமைப்புகள் தனிமையாக இயங்க வேண்டுமென்றோ அன்றேல் ஒன்றுக்கெதிராக மற்றொன்று இருக்க வேண்டுமென்றோ என நான் இங்கு வலியுறுத்தவில்லை. இன்று பெண்ணியம் ஓர் சர்வதேசப் பிரச்சனை. அரசியல், பொருளாதார, சித்தாந்த ரீதியாக பெண்ணடிமைத்தனம் உலகளாவிய அமைப்பு ரீதியான ஒன்று.

பெண்ணடிமைத்தனத்திற்கு எதிரான போராட்டம் சர்வதேசக் குணாம்சம் கொண்டதாக இருக்க வேண்டும். "உலகாளவிய அமைப்பில்" வேரோடியுள்ள பெண்ணடிமைத்தனத்திற்கு எதிரான பொதுவான போராட்டத்தில்தான் தனிப்பட்ட கலாச்சார அடிப்படைகளை அடையாளங்களை தம்முள் கொண்டுள்ள பெண்கள் ஒன்று சேர முடியும். பெண்ணியம் சர்வதேசமயமாக்கப்பட வேண்டுமாயின் பல கூறுகளை உள்வாங்கக்கூடிய வளைந்து கொடுக்கும் தன்மையைக் கொண்டதாகவும் அதேவேளையில் உறுதியான விசேட குணத்தைக் கொண்டதுமாகவும் பலதரப்பட்ட குறைபாடுகளுக்கு எதிராகப் போராடக் கூடிய பரந்த தன்மையைக் கொண்ட முழுமையான இயக்கமாகவும் சமூக மாற்றத்திற்காகவும் மனித சுதந்திரத்தினையும் போராட்ட இலக்காகக் கொண்டதாகவும் அமையவேண்டும்.

*(அமெரிக்காவில் வாழும் இலங்கைப் பெண்மணியான அசோக பண்டார ஓர் பெண்ணிலைவாதி. இவர் ஆங்கிலத்தில் எழுதிய Towards International Feminism என்ற இக் கட்டுரை பெண்களின் தேவையையும் அவசியத்தையும் கருதி இங்கு தமிழாக்கம் செய்யப்பட்டு-பிரசுரிக்கப்பட்டுள்ளது.)*

தமிழில் : தேவா(சுவிஸ்)


**நாளைக்கு இன்னொருத்தன்**

சிறுகதைத் தொகுப்பு

றாஜேஸ்வரி பாலசுப்ரமணியம்

வெளியீடு

*Kumaran Publishers*
*79 1st Street,*
*Kumaran Colony,*
*Vadapalani,*
*Chennai 600 026*




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# வாயில் ருசியும் தலையில் அரைப்பும்

- றஞ்சி(சுவிஸ்)

உலகெங்கும் இப்பொழுது மக்டொனால்ட்ஸ் உணவகம் தன்னை வியாபித்துக் கொண்டுவருகிறது.. இன்று முதலாளித்துவ வாத்தக அமைப்பில் முதன்மை வகிக்கும் நிறுவனங்களில் மக்டொனால்ட்ஸ் உம் ஒன்று. 1940ம் ஆண்டில் மொறிஸ் றிச்சார்ட், மக்டொனால்ட்ஸ் என்னும் இரு சகோதரர்கள் கூட்டுச் சேர்ந்து தாம் தயாரித்த ஹம்பேர்க்கர்களை அமெரிக்காவின் முக்கிய நகர்களில் ஒன்றான கலிபோர்னியாவில் ஒரு சினிமா தியேட்டரின் அருகில் வீதி வியாபாரமாக விற்பனை செய்து வந்தனர். பின்னர் இவர்களால் 1948ம் ஆண்டளவில் சொந்தமாக சிறு மக்டொனால்ட்ஸ் உணவகம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டு, பின்னர் 1952ம் ஆண்டு கலபோர்னியா நகரமெங்கும் உணவகங்கள் ஆரம்பித்து அதில் பலமடங்கு இலாபமடைந்தனர். பின்னர் றே குறொக், மைக்கேல் குயீன்ஸ் என்பவர்கள் இம் மக்டொனால்ட்ஸ் நிறுவனத்திற்கு தலைவர்கள் ஆனார்கள்.

அமெரிக்காவின் இன்னொரு நகரமான ஒஹாரே விமானநிலையப் பகுதியில் மக்டொனால்ட்ஸ் தமது தலைமையகத்தைக் கொண்டிருக்கிறது. இன்று 110 நாடுகளுக்கு மேல் காலுன்றியுள்ள இந் நிறுவனம் அந்தந்த நாடுகளில் மக்களுக்கு தாங்கள் துரித சேவையை வழங்குவதாக தம்பட்டம் அடித்து பெருமையும் கொள்கிறது. தினமும் 33 மில்லியன் மக்களுக்கு சேவையாற்றுவதாக கூறிக் கொள்கிறது. பொதுவாக 24 மணிநேரமும் உலகின் எங்காவது ஒரு மூலையில் மக்டொனால்ட்ஸ் கிளை அமைக்கப்படுகிறது. வெளிநாடுகளைப் பொறுத்தவரை இதற்கு எதிராக போட்டி போடுபவர்கள் கூடுதலாக இருந்தாலும் உள்ளூரில் நிகழும் இலாப நட்டங்களை வெளிநாட்டுக் கிளைகளின் மூலமே பூர்த்தி செய்கின்றன.

அமெரிக்காவிற்கு மக்டொனால்ட்ஸ் உணவகத்துக்கு மாற்றாக பேர்கர்கிங் என்ற உணவக நிலையம் இயங்கினாலும் மக்டொனால்ட்ஸ் தான் அதிகம் இலாபமடைகிறது. அத்துடன் இந்த ஆண்டில் நடந்து முடிந்த உலகக் கோப்பைக்கான கால்பந்துப் போட்டியிலும், 2000ம் ஆண்டில் நடைபெறவிருக்கும் ஒலிம்பிக்கிலும் உத்தியோக பூர்வமான துரித மென்பான உணவுகளை வழங்குவதற்கான அங்கீகாரத்தை மக்டொனால்ட்ஸ் பெற்றுள்ளது. சீனா, தாய்லாந்து, கொங்கொங், கொரியா போன்ற நாடுகளிலுள்ள வோல்ற்றர் டிஸ்னி (Walter Disney) நிறுவனத்துடன் 10 வருடங்களுக்கு விளையாட்டுப் பொருட்களை கொள்வனவு செய்வதற்கான ஒப்பந்தமும் செய்துள்ளது. இதைவிட சிறுவர்களைக் கவரும் விளையாட்டுப் பகுதிகள் மற்றும் ஹப்பி மீல்ஸ் எனும் உணவு வகைகளாலும், Express Stores Front, Mcdrive (காரிலிருந்து கொண்டே பெறப்படும்) போன்றவற்றாலும் மக்கள் பெருமளவில் மக்டொனால்ட்ஸ் உணவகத்தில் குவிகின்றார்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சர்வதேசரீதியாக வாத்தகத்தை விரிவுபடுத்திவரும் மக்டொனால்ட்சுக் ஆசியா மிகவும் சிக்கலை கொடுத்து வருகிறது. சீனாவில் 85 கிளைகள் இருந்தாலும் பெரிதாக இலாபம் இல்லையெனவும் இவர்களின் முழு இலக்கும் இந்தியாவையே சுற்றி இருப்பதாகவும் அதற்கான பேச்சுவார்த்தைகள் இந்திய அரசுடன் நடத்தி வருவதாகவும் கூறும் அதன் பொறுப்பாளர் இந்தியாவிலும் சரி மற்றைய ஆசிய நாடுகளிலும் சரி தமது பொருட்களுக்கு விலை நிர்ணயிப்பதும் உணவு நிலையங் களுக்கு மக்களை வரவழைப்பதும் மிகவும் சிக்கலாக உள்ளதாகவும் கூறுகிறார். இந்தியாவில் கிட்டதட்ட 600 அல்லது 700 கிளைகளை ஆரம்பிக்க உத்தேசித்து இருப்பதாகவும் கூறுகிறார். ஐரோப்பாவைப் பொறுத்தவரை ஜேர்மனியிலும் சுவிசிலும் ரயிலுக்குள்ளும் உணவு நிலையங்களை அமைத்துள்ளது. அடுத்து பிரான்சில் கூடிய கிளைகளையும் இத்தாலியில் Burcy நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்து அதையும் வாங்கியதன் மூலம் அங்கும் பெருமளவில் கிளைகளை ஆரம்பித்துள்ளது.

ஐரோப்பாவில் மக்டொனால்ஸ்சுக்கான போட்டி மிகக் குறைவானதாகவே உள்ளது. அத்துடன் அதன் தரம், சுத்தம், துரித சேவை போன்றவை மக்களை கவர்கிறது. சுவிசில் கிட்டதட்ட 17000 பேர் வரை மக்டொனால்ட்ஸில் வேலைசெய்து வருகிறார்கள். இவர்களில் பலர் மாணவர்கள். குறைந்த சம்பளம் கூடிய வேலை என்ற முறையில் வேலையாட்களை பிழிந்து கொண்டிருக்கும் இந் நிறுவனத்தில் ஒரு நாளைக்கு கொட்டப்படும் சாப்பாடு உலகில் பட்டினியால் வாடும் ஏழை மக்களுக்குப் போதுமானது என கணிப்பிடப்படுகிறது. இப்படியாக உணவு வீண் விரயம் செய்யப்படுகிறது. இவர்களின் குறிக்கோள் இலாபம் தான். சுவிசில் இருக்கும் சூரிச் நகரிலுள்ள ஒரு மக்டொனால்ட்ஸ் ஒருமுறை 3 மணித்தியாலங்களுக்குள் 800 ஹம்பேர்க்கர்களை விற்றுள்ளதாக செய்தியொன்று வெளியாகியிருந்தது. இது சிறு உதாரணமே. இப்படியாக இவர்களின் இலாபம் பெருகி வருகின்றன. சென்ற ஆண்டு(1997) சுவிசில் 300 மில்லியன் பிராங்குகளை இலாபமாகப் பெற்று -Migros சுப்பர் மார்க்கெற் க்கு அடுத்ததாக- இரண்டாவது இடத்தை மக்டொனால்ட் ஆக்கிரமித்துள்ளது.

இவர்களின் உணவு வகைகளை தயாரிப்பதற்கான இறைச்சி வகைகள் அனைத்தும் மூன்றாவது உலக நாடுகளின் நிலங்களையும், இலத்தீன் அமெரிக்க நாடுகளின் காடுகளையும் அழித்து பெறப்படுகிறது. அங்கு இலட்சக்கணக்கான மாடுகளை வளர்த்து இறைச்சி பெறப்படுவதாகவும், அந் நிலங்களில் மீண்டும் விவசாயம் செய்யமுடியாத அளவுக்கு பல மருந்து வகைகளை பாவிப்பதாகவும் விவசாய ஆராய்ச்சி நிலையங்கள் பலத்த கண்டனம் தெரிவித்திருப்பதாக செய்திகள் வெளியாகின. ஆனால் தாங்கள் பல நாட்டு மக்களின் வேலையில்லாத் திண்டாட்ட த்தை தீர்த்து வைப்பதாக மக்டொனால்ட்ஸ் தம்பட்டம் அடித்துக் கொள்கிறது.

இதனால் பல இடதுசாரிகள் மக்டொனால்ட்ஸில் சாப்பிடுவதையே அருவருப்பாக நினைக்கிறார்கள். மக்டொனால்ட்ஸின் கோமாளித்தனமான, போலிச் சிரிப்புடன் முகத்திரையிட்டு வாழ்பவர்களை வெறுக்கிறோம் என்கிறார்கள் அவர்கள்.

www.tamilarangam.net



# தமிழில் பெண்கள் சினிமா
## - சில குறிப்புக்கள்

- யமுனா ராஜேந்திரன்
லண்டன்.

பெண்கள் சினிமா என்பதை பெண்களுக்கான சினிமா, பெண் இயக்குநர்களின் சினிமா, பெண்கள் சினிமாவில் சித்தரிக்கப்பட்ட விதம் என்று பல்வேறு நோக்குகளில் விளக்கப்படுத்தலாம். தமிழில் பெண் சினிமா இயக்குநர்கள் இருக்கிறார்கள். சுகாசினி, ஸ்ரீப்பிரியா, பானுமதி, ராமகிருச்சனா, ரேவதி, ரோகினி என்று ஒரு பட்டியலும் போடமுடியும். ஆனால் பெண்களுக்கான சினிமா, பெண் பிரக்ஞை கொண்ட சினிமா இருக்கிறதா என்பது மிகப் பெரிய கேள்விக் குறிதான்.

மேற்கிலும் மூன்றாம், உலக நாடுகளிலும், ஏன் இந்தியாவிலும் கூட,
- பிரபல பெண் இயக்குநர்கள் இருக்கின்றார்கள்
- பெண்களுக்கான சினிமா இருக்கின்றது
- பெண்கள் சினிமா பற்றிய கோட்பாடு விமர்சனங்கள் இருக்கிறது

- பெண்கள் சினிமாவில் சித்தரிக்கப்பட்ட விதம் குறித்த ஆய்வுகள் இருக்கின்றன. இந்த ஆய்வுள் மூன்று வகையானவை:
  1.பெண் கதாநாயகிகள் ஒவ்வொரு காலகட்டத்திலும் திரைப்படங்களில் பெற்ற பாத்திரங்களின் தன்மைகள்
  2.சமூகத்தில் நடிகைக்கு இருந்த ஸ்தானம்
  3.பெண்கள் வரலாற்று ரீதியில் சித்தரிக்கப்பட்டு வந்த விதம்

தமிழ்ச் சினிமாவில் நான் குறிப்பிட்ட அனைத்து விசயங்களுமே அதன் தீவிரமான தளத்தில் முன்னெடுக்கப்படவில்லை.

இதற்கான காரணங்களையும் இரண்டு வகைகளில் நோக்கலாம். பொதுவாகவே சினிமா குறித்த ஆய்வுகள் ஆண்களால் கூட நோக்கப்படவில்லை. சினிமாவில் சம்பந்தப்பட்ட பெண்கள் சினிமாவில் பெற்ற இழிநிலையும், சினிமா பற்றிய அக்கறையான ஆய்வுகளில் பெண்களும் ஈடுபாடு காட்டவில்லை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சீதனம்
## – சில புள்ளிகள்

*ஆண்களைவிட பெண்களே சீதனத்தை கோருவதில் முன்நிற்கிறார்கள் என்றொரு குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டு வருகிறது.*

ஆண் தலைமை தாங்கும் அல்லது அதிகாரம் செலுத்தும் ஒரு நிலையே குடும்பத்துள் நிலவுகிறது. அது தகப்பனாக இருந்தாலென்ன; கணவனாக இருந்தாலென்ன; மகனாக இருந்தாலென்ன; சகோதரனாக இருந்தாலென்ன பாத்திரம் அதிகாரம் செலுத்துவது தான். எனவே அந்த ஆணின் அந்தஸ்து கௌரவம் என்பனவும், பெண் அந்த ஆணிற்கு எந்தளவிற்கு அடங்கி நடக்கிறாள் என்பதுவும் அந்தக் குடும்பத்தை மதிப்பிடுவதில் அளவுகோல்கள் ஆகிறது. இதற்கு ஆண் பெண்ணை ஒரு கருவியாகவும் பாவித்துக் கொள்கிறான். அடுத்தவீட்டு விவகாரத்தை அறிய தனது மனைவியை ஒட்டுக் கேட்க அனுப்பும் அல்லது கண்டும் காணாமல் அனுமதிக்கும் அந்த ஆண் அதை அறிந்து கொள்வதில் அதிகளவு ஆர்வத்துடனேயே இருக்கிறான். "*என்னப்பா பக்கத்துவீட்டு ஆறுமுகம் வீட்டை பிரச்சினை...*" என அறிந்து கொள்ளும் துடிப்புமிக்கவனாக ஆண் இருக்கிறான்தான் .இதை பலர் ஒத்துக் கொள்வதில்லை. ஏனெனில் இதை ஒத்துக் கொள்வதுகூட ஒரு இரண்டாந் தர விடயமாகிப் போய்விடுகிறது அவனுக்கு.

இதே போலவே சீதனத்தை தனது வாயாலே கேட்பதற்கு தார்மீக பலம் அவனிடம் இருப்பதில்லை. இங்கு மனைவியையோ தாயையோதான் அவன் பாவித்துக் கொள்கிறான் - ஒரு கருவியாக. இது வெளிப்படைக்கு தாய்தான் சீதனம் கேட்கிறாள் என்பதுபோல இருக்கும். குடும்பத் தலைவனைக் கேட்காமல் பெண்கள் சுயேச்சையாக சீதனத்தைத் தீர்மானிப்பதாக எவராலும் ஒப்புவிக்க முடியாது. இதுதான் குடும்பத்துள் நடப்பது. பெண்களை கருவியாகப் பாவித்துவிட்டு அவர்கள் தலையிலேயே குற்றத்தையும் சுமத்துவது சுத்த அயோக்கியத்தனம் நிறைந்தது.

*பெண்கள் நினைத்தால் சீதனம் கொடுப்பதை மறுத்து சீதனத்துக்கு எதிராக போராட முடியும் என பெண்கள் தரப்புமேல் பொறுப்பை சிலர் சுமத்துகின்றனர்*

எமது சமூகத்தில் ஒரு ஆண் கல்யாணம் செய்யாமல் எதேச்சையாக இருந்துவிடலாம்; அதையே பெண் செய்தால் அவள் பழி வாங்கிக் கொள்ள நேர்கிறது. அவளால் சுயாதீனமாக இருந்துகொள்ள முடிவதில்லை. எனவே சீதனம் கொடுக்காமல்தான் செய்வேன் என்று ஒரு பெண் உதிரியாக நின்று போராடுவதைவிட, ஒரு ஆண் சீதனம் வாங்காமல்தான் கல்யாணம் செய்வேன் என்று போராடுவது மிக சுலபமானது- சீதனத்தை ஒழிக்க வேண்டும் என மனதார விரும்பினால்.
ஆணாதிக்க கருத்தியல்களால் அடக்கி ஒடுக்கப்படும் பெண்களேதான் தமது சுதந்திரத்திற்காகப் போராட வேண்டும் என்ற வாதம் சரியானதுதான். அதற்கு

www.tamilarangam.net



பெண்கள் அமைப்பாக ஒன்றுபட வேண்டும். அந்த நிலையில் சீதனம் கொடுக்காமல் தான் கல்யாணம் செய்வேன் என அவர்கள் உறுதியாக நிற்கவும் முடியும். எனவே உதிரி நிலையில் பெண்களைவிட ஆண்களே சீதனம் வாங்கி செய்ய மாட்டேன் என்ற இந்த நிபந்தனையை இலகுவாக சாத்தியமாக்கலாம்.

*"பெண்களே ஆண்களுக்கான ஒரு சீதனம்" என அப்பாவித்தனமாக ஒரு வாதத்தை சில பெண்கள் முன்வைக்கிறார்கள்.*

இதன்மூலம் தாம் ஆணின் சொத்துத்தான் என்பதை மறைமுகமாக ஏற்றுக் கொள்கிறார்கள். இந்த நிலையில் ஆண்கள் சீதனம் வாங்காமல் செய்ததை பெருந்தன்மையாகக் காட்டி அதைப் பணயமாக வைத்து மற்றைய விடயங்களில் பெண்ணை மோசமாக அடக்கியொடுக்கவும் செய்கிறார்கள். பெண்ணை இரண்டாம் நிலையில் வைத்துக்கொண்டே காட்டப்படும் மனிதாபிமானம் என்பதெல்லாமும்கூட பெண்ணை இரண்டாம் தர நிலையில் உறுதிப்படுத்திக் கொள்ளத்தான் பயன்படும். ஆணைப் போலவே இரத்தமும் சதையுமுள்ள உணர்ச்சிகள் உணர்வுகளுள்ள ஒரு மனித ஜீவி பெண் என்பதை இருசாராருமே புரிந்துகொள்ள வேண்டும். இதைவிடுத்து ஆணாதிக்கக் கருத்தியலை பெண்கள் மீது நயவஞ்சகமாக கலாச்சாரம், மரபு, இயற்கை என்ற போர்வைகளில் திணிப்பதும், அதேபோல் இவைகளை கேள்வியின்றி பெண்கள் ஏற்றுக் கொள்வதும், "இயல்பானதுதானே" என மனதை வசப்படுத்திக் கொள்வதிலும் திருப்தியுற்றால், சீதனமின்றி நடக்கும் கல்யாணமும் ஒரு பிச்சைதானேயன்றி (அ-து ஆண்களின் தரப்பில் பெரும்தன்மை) மனிதனை மனிதனாக மதிக்கும் செயற்பாடாக இதை கருதவேமுடியாது.

இதேபோலவே சீதனமின்றி தன்னை தனது கணவன் கல்யாணம் முடித்ததாகக் கூறி சில பெண்கள் பெருமைப்பட்டுக் கொள்கிறார்கள். அதை தனது கணவன் தனக்கு உவந்தளித்த ஒரு கொடையாக நினைக்கிறார்கள் அல்லது அவர் தன்மீது மனிதாபிமானம் காட்டினார் என அர்த்தப்படுத்துகிறார்கள். இந்தச் சந்தர்ப்பங்களிலும் உண்மையிலேயே அந்தப் பெண் தனது இரண்டாந்தர நிலையை உறுதிப்படுத்திக் கொள்கிறார் என்பதுதான் இதன் உள்ளார்ந்த செய்தி. கணவனின் "தியாகத்துக்கு" நன்றியுணர்வுடன் பெண் நடந்துகொள்ளும் இச் சந்தர்ப்பங்களில் "சீதனம் வாங்காமல் உன்னை நான் திருமணம் செய்தேனே" என சாதித்து, அப் பெண்ணை ஆண் மேலும் அடக்க ஒடுக்கவும் முயலலாம் என்ற பக்கத்தையும் நாம் நிராகரிக்க முடியாது.

*சீதன ஒழிப்புக்கு காதலை ஊக்குவித்தல் ஒரு வழி என்று கூறப்படுகிறது.*

காதல் கல்யாணத்தில் போய் முடிய வேண்டும் என பிரார்த்திப்பதும், பெண்ணுக்குள் அடங்கியிருக்கிற அதுபற்றிய அச்ச உணர்வு அழிந்துபோக சமூகம்தான் உத்தரவாதம் செய்ய வேண்டும். அப்போதுதான் சுதந்திரமான காதல் மலரும்.

www.tamilarangam.net

சீதன முறையின் மேல் சில உடைவுகளை ஏற்படுத்தக்கூடியது என்பது ஏற்றுக் கொள்ளக்கூடியதுதான்.

மேலும் காதலிப்பவர்கள் சீதனம் கேட்பதுகூட எமது சமூகத்தில் ஒன்றும் புதினமான விடயமுமல்ல.

எனவே காதல் சீதனத்தை ஒழித்துவிடும் என்று நாம் கனவுகாணத் தேவையில்லை. சீதனத்தில் ஒரு உடைவை ஏற்படுத்தும் என்றளவில் அதற்கொரு பாத்திரம் உண்டு என்பதை மறுப்பதற்கில்லை. அது வரவேற்கப்படக் கூடியது. ஆனால் அதை சீதன ஒழிப்புக்கான ஒரு வழிமுறையாக முன்வைக்க முடியாது.

*சீதனச் சந்தை. மாப்பிளையை விலைக்கு வாங்குவது... என்ற பதங்களால் ஜனரஞ்சகமாக சீதனத்தின்மீது சிலர் தாக்குதல் தொடுக்கிறார்கள்.*

உண்மையில் இதுகூட ஆண் நோக்கிலான ஒரு தந்திரமான சொற்பிரயோகங்கள்தான். பெண் ஆண் இருவருக்கும் இடையில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் ஏற்றத்தாழ்வை பணம் நிர்ணயிக்கவில்லை. அப்படியிக்கும்போது ஆண்களை விலைக்கு வாங்குதல் அல்லது மாப்பிளைச் சந்தை என்பது பெண்களின் இரண்டாந்தர நிலையை முதல் நிலைக்கு கொண்டுவரும் ஒரு களமல்ல. வாங்குதல் என்பது ஒரு பண்டத்தை பணம் கொடுத்து வாங்குவது என்பது மட்டுமல்ல அதை எமது தேவைகளுக்கு ஏற்ப பயன்படுத்திக் கொள்வது என்பதுமாகும். ஆனால் சீதன விவகாரத்தில் அதாவது ஆண் பெண் விவகாரத்தில் இது நிகழ்வதில்லை. சீதனம் கொடுத்த பெண்கள் “வாங்குவது” என்பதினூடாக திருப்திப் பட்டுக்கொள்ளலாமே தவிர தலைகீழ் மாற்றம் எதுவும் நிகழ்ந்து விடப் போவதில்லை. (இந்தத் திருப்தியை பெண்ணுக்கு வழங்கி இடம் பிடித்துக் கொள்கிறது ஆணாதிக்கம்)
அதாவது சீதனம் கொடுத்து “வாங்கப்பட்ட” ஆணும் குடும்பத்தில் அதிகாரம் செலுத்தும், அல்லது தலைமை தாங்கும் நிலைமையே நீடிக்கும்.

ஆண்கள் விலைக்கு வாங்கப்படுவது என்ற சொல்லுக்குப் பதிலாக எமது சமூகத்தில் பெண்ணாய்ப் பிறந்ததிற்கான ஒருவகை அபராதம்தான் சீதனம் என்று வரையறுப்பதே பொருத்தம் எனத் தோன்றுகிறது.

*மனிதனை மனிதனாக மதிக்கப் பழகும் பண்பில்
எமது கால்களை ஆழப் புதைத்தபடி
நாம்
என்றுதான் எழுவோம்?*

*(ஐபிசி யில் நடந்த என்றோ ஓர் நாள் எழும் நிகழ்ச்சியில் சீதனப்பிரச்சினை சம்பந்தமான விவாதத்தில் நான் முன்வைத்த கருத்துக்களின் அடிப்படையில் இங்கு இக் குறிப்பு எழுதப்பட்டுள்ளது - ரவி)*

www.tamilarangam.net



## தமிழ்த்தாய்

- க.வே.பூங்கொடி, அமெரிக்கா

தாயோ,
பெற்ற குழந்தைகளைக் காப்பாற்றத்
தத்தளித்துக் கொண்டிருக்கிறாள்.
தோளுக்கு மேல் வளர்ந்தவரோ,
பொருள் சேர்க்க அக்கரைக்குச்
சென்று விட்டார்.
சென்றவர்.
சில ஆண்டுகளுக்கு ஒரு முறை
திரும்பி வந்து
ஆகா,
இதுவல்லோ தாய்வீடு!
இதுவல்லோ என்வீடு!
இந்தக் காற்றையும் மண்ணையும்
விட்டுச் சென்றேனா?
என் மொழியில் பேசுகையில்
என் நா குளறுகிறதா?

www.tamilarangam.net

பயிருக்கு ஏங்கிக் கிடக்கும் நிலத்தை
புறக்கணித்தேனா?
குதித்து விளையாடும் கன்றுகளையும்
கூவி எழுப்பும் சேவல்களையும்
மறந்தேனா?
பழைய சோறும் தயிரும்
துவக்கி வைத்த காலைகளையும்
மறந்தே போனேனா?
என்னை உண்டாக்கிய தாயை
தத்தளிக்கவிட்டுச் சென்றேனா?

அறிவுக்காக ஏங்கிக் கிடக்கும்
தூண்டப்படாத விளக்குகளை
இருளிலே தவிக்கவிட்டேனா,

அந்தக் குழந்தைகளுக்கு,
நான் வாங்கிச் சென்ற
பொம்மை தான் தெரிகிறது,
என்னைத் தெரியவில்லை !
அரவணைப்பும் மறந்து போகுமா?

என்றெல்லாம் கூறிவிட்டு,
துக்கங்களையும் திருமணங்களையும்
விசாரித்து விட்டு,

மடியாத ஏக்கத்தை
மனதிலே என்றும் சுமந்தவராய்
அக்கரைக்கே திரும்பி விட்டார்.

www.tamilarangam.net



# பெண்ணிலைவாதம் - சில கேள்விகள்

*சென்ற இதழ்த் தொடர்ச்சி...*

பெண்கள் வீட்டுவேலைகளில் அதிக அக்கறையுள்ளவர்களாக இருப்பதால் ஆண்களைவிட அவர்கள் குறைந்தளவு உற்பத்தியைச் செய்வதுதான் வேலைத்தலங்களில் காணப்படும் சமத்துவமின்மைக்கு உண்மையான காரணம் இல்லையா?

ஒரு குடும்பத் தலைவனாக இருக்கும் ஆணுக்கு "குடும்ப ஊதியம்" கொடுக்கும் முறையைப் பின்பற்றுவதற்கு ஆதாரமாக முதலாளித்துவம் இந்த வாதத்தை முன்வைக்கிறது. அதாவது ஒரு குடும்பத் தலைவனுக்கும், அவனுடைய மனைவிக்கும் மற்றும் குழந்தைகளுக்கும் வாழ்க்கையை நடத்தத் தேவையான ஊதியத்தைக் கொடுக்கும் முறையே இது. இக் கருத்தின்படி உற்பத்தியில் ஈடுபடும் பெண்கள், குடும்பத்திற்கு தேவையான மேலதிக வருமானத்திற்காகவே எனக் கருதப்பட்டு சம வேலைகளுக்கும் குறைந்த ஊதியத்தையே பெறுகிறார்கள். ஆனால், உண்மை நிலை சற்று வேறுபட்டதாகவே இருக்கிறது. பல நாடுகளில் மேற்கோள்ளப்பட்ட ஆய்வுகளில் 25 வீதம் முதல் 40 வீதம் வரையிலான குடும்பங்கள், பெண்களின் வருமானத்திலேயே தங்கியுள்ளன அல்லது பெண்களின் தலைமையிலான தனிக் குடும்பங்களாக இயங்குகின்றன என்று தெரிவிக்கின்றன. இவர்களில் பெரும்பாலான பெண்கள் ஏழ்மையில் உழல்கின்றனர். இவர்கள் முதலாளித்துவ, தந்தைவழி அமைப்பின் ஏற்புகளால் வேலைத்தலங்களில் பாரபட்சமாக நடத்தப்படுகின்றனர்.

இத்துடன் இன்னொரு உண்மையையும் நாம் கவனிக்க வேண்டும். தொழிற்சாலை, வயல் அல்லது பெருந்தோட்டங்களில் வேலைசெய்யும் பெண்கள் மேலும் பல மணிநேரங்களை சமையல், துப்பரவு செய்தல், துணிதுவைத்தல், தண்ணீர் எடுத்தல், விறகு சேகரித்தல் போன்ற அலுப்பூட்டும் வேலைகளைச் செய்வதிலும் செலவிட வேண்டியவர்களாக இருக்கின்றனர். பெண்கள் இரட்டிப்பு நாட்களை, இரட்டிப்பு சுமைகளை, இரட்டிப்பு ஊசலாட்டங்களை அனுபவிக்கும் நிர்ப்பந்தத்திற்கு உள்ளாக்கப்படுகின்றனர். அதாவது ஊதியம் பெறும் உழைப்பின் (உழைப்பு சக்தியின் ஒரு பகுதியாக ) பளுவையும், ஊதியம் பெறாத உழைப்பின் (வீடுகளில் செய்யப்படும் வேலை) பளுவையும் ஒன்றுசேர சுமக்க வேண்டியவர்களாக இருக்கின்றார்கள். இந்த இரட்டிப்புப் பளுவானது பெண்கள் தகுதியான வேலைகளைப் பெறுவதிலும் பயிற்சிகள் பெற்று சிறப்பான தொழில்களில் திறம்பட முன்னேறுவதிலும் இடையூறாகவே இருந்து வருகிறது.

www.tamilarangam.net

> எனினும் நிச்சயமாக நவீனமயமாக்கல் மூலம் பெண்கள் சமுகத்தில் தமக்குரிய இடத்தைப் பெறுவார்கள். அவர்கள் வீட்டில் வேலைசெய்யும் வேலைப்பளு குறைந்து போகும், அவர்கள் வெளியே சென்று உழைத்து பொருளாதார சுதந்திரத்தைப் பெறுவார்கள், அல்லவா?

நவீனமயமாக்கல் திட்டங்களில் கருத்தியல் ரீதியாகவும் நடைமுறை ரீதியாகவும் ஆண்சார்பு இயல்பாகவே காணப்படுவதால் உழைப்புச் சக்தியிலிருந்து பெண்கள் புறக்கணிக்கப்பட்டு வருவது மட்டுமல்ல, சில இடங்களில் வேலையிலிருந்து நீக்கப்பட்டும் இருக்கிறார்கள் என ஆதாரங்கள் இருக்கின்றன. உதாரணமாக பஞ்சாப் மாநிலங்களில் (இந்தியாவிலும், பாகிஸ்தானிலும்) ஏற்பட்ட கூடுதலான இயந்திரமயமாக்கப்படுதலோடு கூடிய பசுமைப் புரட்சி, பெண்கள் பாரம்பரியமாகச் செய்து வந்த விவசாயத் தொழில்களை அவர்களிடமிருந்து பறித்தெடுத்தது. தொழிநுட்ப வேலைகள் ஆண்களுக்கே பிரதானமாக ஒதுக்கப்பட்டதால் பெண்கள் வேலையில்லாப் பிரச்சனையை எதிர்நோக்க வேண்டியவர்களாக இருக்கின்றனர். மேலும் இத்தகைய அதிகப்படியான செல்வக் குவிப்புக்கள், செல்வச் செழிப்புப் பெற்ற விவசாயிகள் தமது குடும்பத்திலுள்ள பெண்களை அந்தஸ்தின் சின்னமாக வீட்டுக்குள்ளேயே முடக்கிப் போடவும் வழிவகுத்தது.

இலங்கையில் ஆரம்பிக்கப்பட்ட மகாவலித் திட்டம் இத்தகைய பிரச்சனையையே ஏற்படுத்தியது. மிகக் குறைந்தளவிலான நிலங்களே பெண் விவசாயிகளுக்கென ஒதுக்கட்டடது. இதனால் இப் பெண்களுக்கு கடன் உதவி, பயிற்சி பெறும் அனுகூலங்கள் போன்றவை கிடைப்பதிலே சிரமங்கள் ஏற்பட்டன. இக் காரணங்களால் இவர்கள் மிகக் குறைந்த ஊதியம் தரும் வேலைகளைச் செய்ய நிர்ப்பந்திக்கப் படுகிறார்கள். இதனால் அவர்களுக்கு பொருளாதார சுதந்திரத்தை எட்டும் சாத்தியங்களும் மறுக்கப்படுகின்றன. பங்களாதேசிலும் நேபாளத்திலும் கூட இத்தகைய போக்குகள் காணப்படுகின்றன. எனவே தற்கால வளர்ச்சித் திட்டங்களும் நவீனப்படுத்தலும் எங்கள் நாடுகளின் எல்லாப் பெண்களின் அந்தஸ்தையும் நிலைமையையும் முன்னேற்றமடையச் செய்வதற்கான சாத்தியக் கூறுகள் மிகக் குறைவாகவே உள்ளன.

இதனால்தான் வளர்ச்சித் திட்டங்கள் எந்தெந்த வடிவங்களில் பெண்களுக்கு எதிராக நடைமுறைப் படுத்தப்படுகின்றன என்று கூட்டிக்காட்டி பெண்களின் மேம்பாட்டுக்கு வழிவகுக்கும் கொள்கைகளுக்காகவும் திட்டங்களுக்காகவும் வற்புறுத்தும் அவசியம் பெண்ணிலைவாதிகளுக்கு ஏற்பட்டுள்ளது.

*தொடரும்.....*

www.tamilarangam.net



# கலந்துரையாடல்

கலந்துரையாடல் கலந்துரையாடல் கலந்துரையாடல் கலந்துரையாடல்

*கனடா புலம்பெயர் வாழ்வில் தமிழ்ப் பெண்கள் பலர் கனடாவில் வன்முறைச் சூழலில் வாழ்ந்து வருவதையும், அத்துடன் பொருளாதார ரீதியாக ஒடுக்கப்படுவது உடல் உள ரீதியாக பாதிப்புக்குள்ளாவது போன்ற விடயங்களையும் கலந்துரையாடல் மூலம் தந்தோம். இவற்றை சென்ற இதழுக்கு தொகுத்துத் தந்த பாமதிக்கு (கனடா) சக்தியின் சார்பில் எமது நன்றிகள்.*

*இந்த இதழில் சுவிஸில் வாழ்ந்து வரும் மூன்று வெவ்வேறு நாடுகளைச் சேர்ந்த துருக்கிய நாட்டு யுவதியான சோன்யா (16 வயது), ஸ்பானிய யுவதியான நொயிலியா (19 வயது), யூகோஸ்லாவிய யுவதியான கோர்டானா (20 வயது) போன்றோர்களைச் சந்திக்கிறோம். இவர்கள் பெற்றோரை விட்டு தனித்தனியாக வாழும் இளம் பெண்கள். இவர்களுடன் நடத்திய சிறு பேட்டி ஒன்றை சக்தியின் மூலம் வாசகர்களுக்கு அளிப்பதில் மகிழ்ச்சியடைகிறோம்.*

தொகுப்பு - றஞ்சி (சுவிஸ்)

*சோன்யா நீங்கள் 16 வயது நிரம்பிய இளம் பெண். எப்படி நீங்கள் பெற்றேரை விட்டு தனியாக வாழ்ந்து வருகீறீர்கள்?*

பெற்றோரை விட்டுவிடவில்லை. ஆனால் என் சொந்தக் காலில் நிற்கிறேன். நான் துருக்கி நாட்டைச் சேர்ந்தவள் என்றாலும் சுவிசில் பிறந்தேன். எனது பெற்றோர் இப்போதும் பழமையிலேயே ஊறி வாழ்கிறார்கள். அதற்காக பழமையை முற்றாக நான் நிராகரிக்க வில்லை. அதில் பல நல்ல அம்சங்களும் உள்ளன. என்றாலும் எமது துருக்கிய நாட்டு சமூகக் கட்டுப்பாடுகள் பெரும்பாலானவை பெண் ஒடுக்குமுறைக்கு துணை நிற்கின்றன. உதாரணமாக பெண்களின் உடைகளை எடுத்துக் கொண்டால் கிராமத்தில் உள்ள பெண்கள் கண் மட்டும் தெரிய உடைகள் அணிவார்கள். ஆனால் நகரங்களில் இந் நிலைமை மாறி நாகரீக முன்னேற்றத்திற்கு ஏற்றவாறு தம்மை மாற்றிக் கொள்கிறார்கள். கிராமத்தில் வாழும் பெண்கள் எம் போன்ற நாகரீக உடை அணிந்த பெண்களை அருவருப்பாக நோக்குவார்கள். எம் நாட்டுப் பெண்களைப் பொறுத்தவரையில் பாலியல் சுதந்திரம் முற்றாக கட்டுப்படுத்தப் பட்டிருக்கிறது. ஒரு பெண்ணின் சுய உரிமை மறுக்கப்படுகிறது. சமூகத்தில் கூட்டு வாழ்க்கை முறை காணப்பட்டாலும் அது பெண்களின் சுதந்திரத்திற்கு தடையாகவே உள்ளது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

*ஆண்கள் குடும்பச் சுமைகளில் பங்குகொள்வதன் மூலம் பெண்களுக்கு பிரச்சினைகள் தீர்ந்து விடும் என எண்ணுகிறீர்களா?*

நிச்சயமாக இல்லை! எத்தனை ஆண்கள் பெண்களுக்கு குடும்ப சுமைகளில் உதவுகிறார்கள் என்பது கேள்விக்குறியே. ஒருசிலர் இதற்கு விதிவிலக்கு எனலாம். இன்று உலகம் முழுவதும் ஆணாதிக்க வாதிகளினால் ஆக்கிரமிக்கப்பட்டது எனலாம். இது ஒரு குடும்பத்திற்கும் பொருந்தும். ஒவ்வொரு ஆண்களிடமும் தன் மனைவி தனது வேலைக்கானவள் என்ற எண்ணமே உள்ளது. பிள்ளைகளை வளர்க்கும் பொறுப்பு அவளிடமே ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. வீட்டு வேலை முதல் குழந்தை பராமரிப்பு வரை அவளே சுமக்கிறாள். மனைவி கணவனின் பாலியல் தேவைகளுக்கு உரியவள் என்ற கண்ணோட்டமே நடைமுறையில் உள்ளது. ஒரு ஆண் வேலைக்குப் போய் சம்பாதித்துக் கொண்டு வருவதையும் விட பல மடங்கு பெண்ணுக்கு வீட்டு வேலையுள்ளது.

நொயிலியா:

என்னைப் பொறுத்தவரையில் ஒன்று நாம் பெற்றோருக்குப் பாரமாக இருக்கக் கூடாது. அதே நேரத்தில் என் உழைப்பில் என் காலில் நிற்கக் கூடிய சக்தி எனக்கு இருந்ததினாலும் எனது தாயாரின் இரண்டாவது கணவரின் பாலியல் தொல்லையாலுமே நான் வீட்டை விட்டு எனது அம்மாவை விட்டு வெளியேறினேன். இப்பொழுது நான் சுதந்திரமாக இருக்கிறேன். எந்த ஆணோ அல்லது பெண்ணோ என் சுதந்திரத்தில் தலையிட முடியாது.

*உங்களுக்கு ஆண் நண்பர் இருக்கின்றாரா?*

ஆம். அவர் அல்பானிய நாட்டைச் சேர்ந்தவர். என்னுடன் எட்டு மாதங்கள் சேர்ந்து இருந்தார். அவரும் தனது நாட்டு கூட்டு வாழ்க்கை முறையை என்னையும் கடைப்பிடிக்க வற்புறுத்தினார். கூட்டு வாழ்க்கை முறை ஒரு வகையில் நல்லது தான். ஆனால் அங்கு நிறைய சம்பிரதாயங்களும் பெண்களை அடக்கும் முறைகளுமே கூடுதலாக காணப்படுகின்றன. உண்மையிலேயே ஆண்களை நம்பவே முடியாது. நான் ஒரு சுதந்திரப் பறவையாக இருக்க விரும்புகிறேன். இந்த குடும்பம் என்ற சிறைக்குள் புகுந்து எனது சுதந்திரத்தை பறிகொடுக்க விரும்பவில்லை. எனக்கு இப்போது 19 வயது. படித்துக் கொண்டிருக்கும் போதே வேலைசெய்யக் கூடிய வாய்ப்புக்கள் அதிகம். நான் பத்திரிகைத் துறை சம்பந்தமான துறையில் படித்துக் கொண்டு பகுதிநேரமாக வேலைசெய்து வருகின்றேன். இப் பத்திரிகைத் துறை அனுபவம் மிகவும் அற்புதமானது. பத்திரிகைகளிலும் பெண்களைப் பற்றிய விளம்பரங்கள் செயற்கையாகவே காணப்படுகின்றன. இதனால் பெண்களின் சுதந்திரம் சம்பந்தமான பல ஆலோசனைகளையும், பாலியல் வன்முறைகளையும் சாதாரண பெண்களுக்கு புரிய வைப்பதிலும் பெண்களுக்கு அதைத் தெரியப்படுத்துவதிலும் ஆர்வமாக உள்ளேன்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



*திருமணம் செய்யாமல் ஒரு பெண்ணானவள் குழந்தை பெறுவது என்பது மிகவும் தவறான செயலாக சமூகத்தால் கருதப்படுகிறது. இது சம்பந்தமாக உங்கள் கருத்து என்ன?*

எனக்கு சிரிப்புத்தான் வருகிறது. ஒரு பெண்ணுக்கு தான் குழந்தை பெறுவது சம்பந்தமான முடிவெடுக்கும் அதிகாரம் முழுதாக இருக்கிறது. இதில் சமூகமோ அல்லது ஆண்களோ முடிவெடுக்க முடியாது. தாய் பத்து மாதம் குழந்தையைச் சுமந்து பெற்று தனது இரத்தத்தையே தனது சிசுவுக்கு பாலாக கொடுத்து வளர்க்கிறாள். ஆனால் குழந்தையின் initial தகப்பனுடையது. இது தவறானதாகப் படவில்லை இந்த சமூகத்திற்கு. சமூகமே ஆண் மேலாதிக்கத்திற்குக் கீழ் உள்ளது. பெண்கள் எது செய்தாலும் இந்த சமூகத்திற்கு அது தவறாகத்தான் படும். ஐரோப்பாவில் எத்தனை பெண்கள் தங்கள் பிள்ளைகளுக்கு தங்கள் initials வைத்திருக்கிறார்கள். ஆசிய நாடுகளைப் பற்றி எனக்குத் தெரியாது. ஆனால் கேள்விப்பட்டிருக்கிறேன், அங்கு சீதனக் கொடுமை இருப்பதாக. அது உண்மையா என்பது எனக்குத் தெரியாது.

கோர்டானா:

*யூகோஸ்லாவியாவில் நடைபெற்ற யுத்தத்தில் பல பெண்கள் பொஸ்னியாவிலும் மற்றைய பிரதேசங்களிலும் பாலியல் சித்திரைவதைக்கு ஆளாகியுள்ளனர். இதுபற்றி என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?*

என்னைப் பொறுத்தவரையில் இந்த யுத்ததத்தினால் பாதிக்கப்பட்டவாகள் கூடுதலாக பெண்களே என்பது. பல பெண்கள் மிக மோசமான பாலியல் சித்திரைவதைக்கு ஆளாகி இறந்தும் உள்ளார்கள். பல பெண்களுக்கு தங்களை பாலியல் இம்சைப்படுத்தியவர்களின் முகம் கூட தெரியாது மிருகங்களுக்கும் மனிதர்களுக்கும் வித்தியாசம் இருக்கிறதென்று தான் நான் நினைத்தேன். ஆனால் பொஸ்னியாவைப் பொறுத்தவரை மனிதர்கள் மிருகங்களாகியதை என் கண்ணால் பார்க்க முடிந்ததை நினைத்து எனக்கு வெறுப்புத்தான் வந்தது. எனது சகோதரிக்கு தன்னை பாலியல் சித்திரைவதைக்கு ஆளாக்கிய மிருகத்தைத் தெரியாது. ஆனால் அவளுக்கு அந்த அயோக்கியனின் பிள்ளை பிறந்துள்ளது. என்ன செய்யமுடியும். போராட்டமே வாழ்வாய், சகதிக்குள் வாழும் எமக்கும் எம் சகோதரிகளுக்கும் சமூக மாற்றம் வரவேண்டும் என பல வேலைத்திட்டங்களில் ஈடுபட்டிருக்கும் பல அமைப்புகளுடன் சேர்ந்து பாதிக்கப்பட்ட பெண்களுக்கு உதவிகளையும் செய்து வருகிறேன்.

இதனால் வெற்றியடைந்தாலும் சரி தோல்வியை சந்தித்தாலும் சரி தொடர்ந்தும் இணைந்து செயல்படுகின்றோம். அத்தோடு எம் நாட்டில் அன்றாட வாழ்வில் விழிப்புணர்வு அற்று வாழ்ந்து கொண்டிருக்கும் பெண்களை அணுகி பல சிறு கைத்தொழில் முறைகளை அமுல்படுத்தி வருகின்றோம். வாழ்வில் விரக்தியுற்ற



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பல பெண்கள் இப்போது உற்சாகமடைந்துள்ளார்கள். நான் சுவிஸில் மூன்று வருடங்கள் வாழ்ந்தாலும் நான் உழைக்கும் ஒரு பகுதியை இப் பெண்களின் வாழ்விற்காய் செலுத்திக் கொண்டிருக்கிறேன். இதனால் எனக்கு மனநிம்மதியும் ஏற்படுகின்றது. பெண்கள் அனைவரும் தனித்தனியாக செயற்படாமல் ஒரு வலைப்பின்னல் முறையில் குழுத்திட்டத்தை ஏற்படுத்தி, தொடர்பை computer internet வழியாக ஏற்படுத்தி, எல்லா நாடுகளிலுள்ள பெண்கள் அமைப்புக்கள் சேர்ந்து வேலை செய்தால் பல பெண் ஒடுக்குமுறைகளுக்கு எதிராக குரல் கொடுக்கும் வலிமை அதற்கு இருக்கும்.

*குடும்ப அமைப்பு முறை பற்றி என்ன நினைக்கிறீகள்?*

திருமணம் என்பது பெண்ணை சுரண்டும் குடும்ப அமைப்பு முறையின் ஒரு சடங்கு. இன்றைய முற்போக்குவாதிகள், அரசியல்வாதிகள், புத்திஜீவிகள் எல்லோரும் குடும்ப அமைப்புமுறை பற்றியும் பெண் விடுதலை பற்றியும் தங்கள் நிகழ்ச்சி நிரல்களில் இணைத்துக் கொள்கின்றனர். இது நிச்சயமாக அவர்களில் பலருக்கு பெண்களின் விடுதலையில் அக்கறை என்பதால் அல்ல. அது அவர்களின் அரசியலுக்கு நவீனத்துவத்தை ஏற்படுத்துவதாலேயே.

பாலியல் சுதந்திரம் என்ற அடிப்படையிலேயே குடும்ப கட்டமைப்பை உடைக்க விரும்பும் முற்போக்குவாதிகள் தங்கள் பாலியல் உணர்வுக்கு வரையறை ஏற்படுத்தப்பட்டிருப்பதையே மாற்றியமைக்க விரும்புகின்றனர். இறுதியாக பெண் எழுச்சிக்கான வேலைத்திட்டங்கள் பல தளங்களில் பல மொழிகளில் நடைபெற வேண்டும். அவரவர் ஈடுபாடு கொண்ட வேலைத்திட்டங்களில் ஈடுபடலாம். இதனால் பல பெண்களிடையேயும் அமைப்புகளிடையேயும் கருத்து முரண்பாடு நிச்சயம் இருக்கும். என்றாலும் பெண்கள் குழுக்களாக சேர்ந்து விவாதிப்பதற்கு சந்தர்ப்பத்தை ஏற்படுத்த எம் போன்ற பெண்கள் முன் வரவேண்டும் என்பது எனது அவா.

---

**நான் ஒரு பெண்**
பெண்கள் தொடர்பான "சரிநிகர்" கட்டுரைகளின் தொகுப்பு
(1990-1996)
*பாரதி வெளியீட்டகம்*

**பெண்**
சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையத்தின் சஞ்சிகை
*Suriya Women's Development Centre*
*27 A Lady Manning Drive*
*Batticaloa*

www.tamilarangam.net



# பெண்ணே உனக்கு தலை வணங்குகிறேன்

*- சுதர்சனா (கனடா)*

நெருப்பாய், நீயாய்
கல்லாய், கனியாய்
மகளாய், சகோதரியாய், காதலியாய், தாயாய்
எண்ணற்ற பரிமாணங்களின் இருப்பிடமாய்,
அநீதியே, எல்லையற்றவளே,
கண்காணாக் கடலே, கட்டுப்படுத்த முடியாக் காற்றே!

பூமாதேவியென்றார் பொறுமையைப் பரீட்சிக்கவோ,
மண்ணைப் பிளந்து பொருள் தேடுவது போல்
உன் நெஞ்சைப் பிளந்து என்ன தேடுகின்றார்?
பிளந்தாலும், நிலை குலைந்தாலும் மாறாப் புன்னகை தேவையென்றார்
அதுதான் பெண்மைக்கழகென வகுத்தார்.

www.tamilarangam.net

பொட்டிட்டு உடமையாக்கிப் பின்
சிறகொடித்த நிலை மறைக்க பொட்டிட்டு, பூவிட்டு பொன்னிட்டார்.
தலைவனிழந்ததால் பறித்தார் அனைத்தையும், உயிர் உட்பட
பெண்மை காக்க மனிதம் பறித்தார் வேதத்தையும் தரித்து.

கற்பெனும் கயிற்றால் கட்டி தாயன்பைவிட பதிபக்தி மேலென்றார்
பெண், ஆண் சார்ந்து வாழ்வதே அழகென்றார், வாழ்வென்றார்,
தம் சுயநலம் பேண பெண்ணுரிமை பறித்த புருஷர்கள்
இன்று நேற்றல்ல பல்லாயிர ஆண்டுகளாய்

பிரித்தாளும் யுக்தியைக் கையாண்டார் காலனித்துவ அரசினர்
பெண்ணுக்கெதிராய் பெண்ணைத் தூபமிட்டு காக்கிறார்
ஆணாதிக்க அமைப்பிலூறிய நவீன மாந்தர்

லஷ்மி, சரஸ்வதி, பாரதி, சூர்யா,
இந்திராணி, அரண்யாணி வருணாணி அகன்யாணி
ஸிந்து, கங்கை..... அப்பப்பா உன் பரிமாணங்களெத்தனையோ?
இத்தனையிலும் உனக்கென் சிரம் தாழ்த்துவதற்கு
காரணம் உன் துர்காத் தன்மை யென்றறியாயோ,

ஆக்கவும் அழிக்கவும்
பாதகம் செய்பவரை மோதி மிதிக்கவும்
அநியாயங்களைத் தீயிலிடவும் நியாயங்களை உயிர்ப்பிக்கவும்
நீ கொண்ட சக்தியே துர்க்கையே தலைவணங்குகிறேன்
சர்வதேசப் பெண்கள் தினமாம் இன்று
அருள்வாயே பெண்களெமக்கு உன் ஆசி.

*சமர்ப்பணம் : சர்வதேச பெண்கள் தினம் -மார்ச் 8, 1995*

www.tamilarangam.net

## வழமைபோல் உங்கள் கரங்களில் சக்தி!

சக்தியின் அமைப்பு வடிவம் பற்றியும் ஆக்கங்கள் பற்றியும் விமர்சனங்களையும் ஆக்கதாரர்கள் மீதான விமர்சனங்களையும் தொலைபேசி வழியாகவும் மடல்கள் மூலமாகவும் தெரிவித்த வாசகர்கள் அனைவருக்கும் தோழமையுடைய நன்றிகளுடன் எம்மை நெருக்குகின்ற விடயங்களையும் உங்களுடன் பகிர்ந்து கொள்கிறோம். எமது நோக்கங்களில் ஒன்று பெண்களிடையே வாசிக்கும் பழக்கத்தை ஊக்குவிப்பதாகும். இந்த வகையில் பெண்களின் ஆக்கங்களுக்கு முன்னுரிமை வழங்குகின்றோம் என்பது பொருத்தமானது. அத்துடன் தோழிகள் தான் சக்தியின் தரம், எவ்வகையான ஆக்கங்கள் இடம் பெறவேண்டும் என்பவற்றை தீர்மானிப்பது உங்கள் கரங்களிலேயே தொடர்ந்து விமர்சியுங்கள். எழுதுங்கள் சஞ்சிகை தரமானதாக அமைய உங்கள் ஒத்துழைப்பும் அவசியம்-.

கருத்துகளுக்கு எழுத்து வடிவம் கொடுப்பது மிகவும் அவசியம் என கருதுகிறோம் சஞ்சிகையை வெளியிடுபவர்களும் உங்கள் எல்லோரையும் போல் வேலை, வீடு என்ற நாளாந்த பிரச்சனைகளை சந்திக்கும் சாதாரண பெண்களே என்பதை கருத்திற் கொள்ளும் படி கேட்டுக் கொள்கிறோம். ஆக்கங்கள் எழுதும் விமர்சிக்கும் பெண்களின் எண்ணிக்கை அருகி (வருவதையிட்டு) வருவது எமக்கு மிகவும் சுமையாகவும் கவலையாகவும் உள்ளது. பெண்களின் உரிமைப் போராட்டத்தில் ஏனைய துறைகளைப் போல இலக்கிய உலகத்திலும் நாம் கணிசமான பங்களிப்பினை வழங்க வேண்டும் என்பதை கருத்திற் கொள்ள வேண்டும் எதற்கும் ஓர் ஆரம்பம் உண்டு. எனவே இன்று தொடக்கம் இரண்டு வரிகள் எழுதுவதாக சங்கல்ப்பம் செய்து கொள்வோம். தரம் தரமற்றவை என்ற மதிப்பீடுகளைத் தவிர்த்து எழுதவேண்டும் என்ற எண்ணத்தை எம்முள் எழுப்புவோம். எதிர்வரும் காலங்களில் பல திசைகளில் இருந்து பெண்களின் ஆக்கங்களை எதிர்பார்க்கிறோம். மற்றும் சக்தியின் வளர்ச்சியில் ஆர்வமுடைய அனைவருக்கும் தயவான வேண்டுகோள்!

புனைபெயரில் எழுதும் பெண்கள் ஆண்களின் பெயர்களை புனைபெயராக தெரிவு செய்வதைத் தவிர்த்துக் கொள்ளும்படியும் அதேவேளை பெண்களின் பெயர்களை புனைபெயராக தெரிவுசெய்யும் ஆண்கள் தயவு செய்து எதிர் காலத்தில் இதைத் தவிர்த்துக் கொள்ளும் படியும் கேட்டுக் கொள்கின்றோம்.

தோழமையுடன்
தோழிகள்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## என்னுடைய தானியங்கள்

நானும் நேசிப்பது
சுதந்திரம்தான்-
எனினும்
பழுதுற்ற இறக்கைகள்...
"பறத்தல்"
மனசுள் தேங்கும்
கனவாய்...
சிறிதாய்
தத்தி நகர்ந்து
இந்த நிலத்திலேயே
எனக்கான
தானியங்களைத் தேடுவேன்
ஆம்!
என்னுடைய தானியங்கள்
இங்கேதான்
சிதறிக் கிடக்குமென
இன்னும் நம்புகிறேன்!

***சத்தியபாலன்***

***(நன்றி: கவிதை-வைகாசி 1994)***